# இருது சங்கார காவியம்

[ குறிப்புரையுடன் ]

யாழ்ப்பாணம்,
முகாந்திரம் தி. சதாசிவ ஐயர்
செய்தது

Copyright 1950 Reserved

Printed at
THE THIRUMAKAL PRESS, CHUNNAKAM,
and published by
**Sri S. Muttucumaraswamy Iyer,**
Alavetty, Chunnakam

*பிரதி விலை: ரூ 1-50*

கிடைக்கும் இடம்:
முகாந்திரம் தி. சதாசிவ ஐயர்,
சுன்னாகம்.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | Introduction ... ... | v |
| 2. | முகவுரை ... ... | viii |
| | இருது சங்கார காவியம்:- | |
| 3. | பாயிரம் ... ... | 1 |
| 4. | முதுவேனிற் பருவ வருணனை ... செய்யுள் 28 | 2 |
| 5. | கார்ப் பருவ வருணனை ... செய்யுள் 28 | 13 |
| 6. | கூதிர்ப் பருவ வருணனை ... செய்யுள் 26 | 26 |
| 7. | முன்பனிப் பருவ வருணனை ... செய்யுள் 18 | 37 |
| 8. | பின்பனிப் பருவ வருணனை ... செய்யுள் 16 | 43 |
| 9. | இளவேனிற் பருவ வருணனை ... செய்யுள் 28 | 49 |
| 10. | செய்யுண் முதற்குறிப்பு அகராதி ... | |

முகாந்திரம், தி. சதாசிவ ஐயர்

( Retired District Inspector of Schools – Ceylon Govt.)

# Introduction.

Ritusamhara is a minor poem among the works of the Immortal Poet Kalidasa. This poem, like Thomson's 'Seasons', is solely devoted to the delineation of the seasons. Ritusamhara means literally 'the Collection of Seasons'; *Ritu* = season & *samhara* = a collection. It is probably one of the poet's earlier productions as it appears to fall short of his other (later) works in depth of poetic vision and artistic finish. But we find in it his most intimate and essential characteristics — his keen appreciation of Nature's beauties, his pervasive sensuousness, his power of illuminative similes and his power of imaginative description.

Comparing Kalidasa's Ritusamhara with Thomson's 'Seasons', we find how widely the genius of the one poet differs from that of the other. Kalidasa's poem (produced in the first or the second century B. C. – that being the period now assigned to the Immortal Poet) is the first poem in the world's literature written with the express object of describing Nature. While the 18th century (A D.) poem of the English poet is more artificial and rhetorical and has less human interest, Kalidasa's treatment of Nature is more emotional and closely related to man's life; it is charming and attractive. Kalidasa's Nature-poetry reveals that he realised always the supreme importance of life as the only abiding basis of a poem's immortality; and in this respect, he is to be classed with the world poets Valmiki, Shakespeare and Kampan.

This poem abounds in many of the characteristic touches of the Kalidasian stamp, though not so subtle and perfected in form as in his other master-pieces. There is his power of felicitous and vivid simile; there is the individual effect of his poetical conceits and forceful presentation and there is his power of

keen observation and lifelike description. That characteristic of the poet, which most impressed the ancient critics, "*Upama Kalidasasya*" (Kalidasa for similes) is everywhere present in this poem: e. g., The deep blue summer sky is like a rich purple mass of powdered collyrium (St. 11); girls with their smiling faces and lovelit eyes are like evenings beautifully decked with the moon (St. 12); the forest-fires look far off like red blossoms and drops of vermillion (St. 24); the new blades of grass are like pieces of split emerald (St. 33); rivers rushing along turbulently and tearing down the trees on either bank are like evil women distracted with passion and dragging down their family on both sides into disgrace (St. 35;) the cloudless autumnal sky, star-spangled and moonlit, is like a lake blooming with white water lilies and a male royal swan reposing therein (St. 77); young damsels fresh from their morning ablutions are like Grha-Lakshmis; (St. 113); the mullai flower opening its buds is like the charming smile of young ladies (St. 139).

Again there are the poetical conceits, like — the Moon towards dawn growing pale with shame at the lovelier brightness of a woman's face (St. 9), the rains coming with the pomp of some great king (St. 29); the clouds like archers shooting their rain-arrows at the lovers from the rainbow stringed with lightning (St. 32). There is the comparison of things in Nature, like — rivers (St. 59), lotus and water-lily (St. 79), autumn (St. 57, 82), the night (St. 63), the earth (St. 33, 135), the pale priyangu creeper (St. 92), — to women in ornamental attire.

This poem is written in six cantos answering to the six Indian Seasons — Summer, Rain, Autumn, Winter, Dew and Spring. Nothing can excel the splendour and power of the opening canto or Summer. The description is bold and energetic. The second and third cantos on Rain and Autumn give us a number of vivid pictures with dignity and restraint, nobler harmony and imagery. The next two cantos the

fourth and the fifth are shorter ones, mostly dealing with feminine beauty and sensuous passion, although there are some descriptions of cold nights, fields, paddy plants animals and birds. But the sixth and last canto on Spring, is very lively and colourful. The Spring is the royal season of the Indian year and has lent itself easily to Kalidasa's inborn passion for colour, sweetness and harmony. This closing canto is the crown of the poem.

The description of the six seasons deals with the feelings awakened by each season in the minds of young lovers. Indeed Kalidasa is a masterly describer of the influence which Nature exercises upon the minds of lovers. This poem is addressed by a lover (or by the poet himself) to his lady love; and at the end of each canto there is an invocation of the blessings of the season described on his lady-love. There are altogether 144 stanzas in this poem.

In this translation in Tamil verse, I have aimed at preserving the spirit of the Sanscrit original and at conveying the poet's idea intact and in full, keeping down to the minimum the use of extra words necessitated by the exigencies of the Tamil metre. I cannot think of a better ending to this brief account of the poem and the poet than this quotation: Professor Macdonnell says, "With glowing descriptions of the beauties of Nature, in which erotic scenes are interspersed, the poet adroitly interweaves the expression of human emotions. Perhaps no other work of Kalidasa's manifests so strikingly the poet's deep sympathy with Nature, his keen powers of observation and his skill in depicting an Indian landscape in vivid and glowing colours".

**J. T. Sadasiva Iyer**

*Chunnakam,*
*1 - 5 - 49.*

# முகவுரை

இருது சங்கார காவியம் என்பது வடமொழியிற் காளிதாச மகாகவி யியற்றிய 'இருது ஸம்ஹார:' என்னும் சிறு காப்பியத்தைத் தமிழில் மொழிபெயர்த்து அதற்ப்பட யாத்த நூலாகும். இருது ஸம்ஹார மென்பது இருதுக்களின் கூட்டம் எனப் பொருள்படும்; இருது — பருவகாலம் (Season), ஸம்ஹார — கூட்டம், சமூஹம். ஸம்ஹார மென்னும் வடமொழி தமிழிற் சங்கார மென வழங்கும். சங்கார மென்னுஞ் சொல் அழித்தல் என்னும் பொருளிற் பெருவாரியிற்ருக வழங்குவதாயினும், இங்கு அது சமூகம், கூட்டம் என்னும் பொருள் பயந்து நிற்பதென்பது. எனவே இருது சங்கார மென்பது ஆறு பருவ வருணனைகளும் ஒருங்கு அமைந்த நூல் எனப் பொருள்படு மென்றறிக. ஆறு இருதுக்களும்: இளவேனில் (வசந்த இருது, சித்திரை — வைகாசி), முதுவேனில் (கிரீஷ்ம இருது, ஆனி — ஆடி), கார் (வர்ஷ இருது, ஆவணி — புரட்டாதி), கூதிர் (சரத் இருது, ஐப்பசி — கார்த்திகை), முன்பனி (ஹேமந்த இருது, மார்கழி — தை), பின்பனி (சிசிர இருது, மாசி — பங்குனி) என்பனவாம். இந் நூலில் முதுவேனில் (கிரீஷ்ம இருது) முதலாக இளவேனில் (வசந்த இருது) ஈருக முறையே ஆறு இருதுக்களையும் வருணித்திருக்கின்றார் கவி. இருதுக்கள் வசந்த முதலாக எண்ணப்படுவது உலக வழக்காயிருப்பவும், கவி கிரீஷ்ம இருதுவை முதலாகக் கொண்டு அவற்றை வருணனை செய்ததும், சமூகம் முதலிய ஏனைய சொற்களிருப்பவும் சங்காரம் என்பதை நூற்பெயராகக் கொண்டதும் 'பிறிதொடு படான் தன்மதங் கொளல்' என்னும் மதம்பற்றி யென்க.

இருது சங்காரம் காளிதாச கவி இளமையி லியற்றிய காப்பிய மென்பது ஆராய்ச்சியாளர் பலரது கொள்கையாகும். இக் கவீச்சுர ரியற்றிய ஏனைய தலைசிறந்த காப்பியங்களாகிய

இரகுவம்சம், குமாரசம்பவம், சாகுந்தலம், மேகதூதம் என்பவற்றிற் காணப்படும் கற்பனைத் திறமும் சொல்லாட்சியும் பொருட்செறிவும் என்னும் கவிதைப் பண்புகள் இந் நூலில் அத்துணைத் திட்ப நுட்பம் பெற்று விளங்காமையே இக் கொள்கைக்கு ஆதாரமென்ப. அஃதெவ்வாறாயினுமாக; காளிதாச மகாகவிக்கே சிறப்பியல்பாக அமைந்த கவிதா சாமர்த்திய சித்திரங்கள் இந் நூலிற் காணப்படாமலில்லை யென்பது எல்லார்க்கு மொப்பமுடிந்த கருத்து. கவி இந் நூலில் இயற்கை வருணனையோடு மக்களிதயத்து இயல்பா னெழும் உணர்ச்சித் திறங்களையும் இயைபுபெற வருணனை செய்கின்றார். இயற்கை யன்னையின் மடியிற் றவழ்ந்து இயற்கை யழகைப் பருகித் திளைத்த வின்பம் இதயத்திற் கவிதையாகச் சுரந்து பெருகி உலகினரை யின்புறுத்தும் ஒப்பற்ற கலைப்பண்பு வாய்ந்தவர் காளிதாச மகாகவி; இயற்கை யிரகசியங்களை நுனித்து நோக்கும் ஆற்றலிலும் அதனை வளம்பெறப் பாடும் புலமையிலும் தலைசிறந்தவர். இயற்கைத் தோற்றங்களை யப்படியே தத்ரூபமான சொல் லோவியங்களாகச் சித்திரித்துக் காட்டுதலும், இயற்கை நிகழ்ச்சிகளால் மக்களுள்ளத்தில் விளையும் உணர்ச்சிவேகங் களை யவற்றோடு தொடர்புபடுத்தி அகப்பொருட் குறிப்புத் தோன்றக் கவிதை புனைதலுமே காளிதாசர்போன்ற பெரும் புலவர்களின் தனிப் பண்பாகும். ஆகவே, மக்கள் வாழ்க்கை யோடு மிக நெருங்கிய தொடர்புபெற ஆக்கிய கவிதைகளே அமரத்துவம் பெறுவன என்பது வான்மீகி, காளிதாசர், திருவள்ளுவர், கம்பர் முதலிய அமரகவிகள் வாயிலாக நாமறியக்கிடப்பதென்பது.

ஒவ்வொரு பருவ காலத்திலும் இயற்கையன்னை யளிக்குங் காட்சிகளை வருணனை செய்வதற்கென்றே இலக்கிய உலகில் முதன்முதல் (இற்றைக்கு முன் 2000 ஆண்டுகள் வரையில்) எழுதப்பட்ட காவியம் இவ் விருது சங்காரமே யென்பது நன்கு அறியத்தக்கது. வடமொழிப் புலவர்கள் இயற்கை வருணனை பாடுங்கால் இருதுக்களை யாதாரமாகக்கொண்டு ஆறாக வகுத்துச் செய்யுள் செய்வர். தமிழ்ப் புலவர்கள்

திணையை யாதாரமாகக்கொண்டு ஐந்தாக வகுத்துச் செய்யுள் செய்வர். இதுவே இருவர் செய்யுள் நெறிக்குமுள்ள வேறுபாடென்பது. இருவர் செய்யுளுக்கும் பொருளாவது அகமே யென்றறிக. அகம் என்பது சிருங்காரமென்னும் காமச் சுவையாம். ஒத்த காமமுடையா ரிருவரிடை நிகழும் இவ் வகத்திணைப் பொருளைத் தமிழ் நூலார் புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என ஐந்தாக வகுப்பர்; வட நூலார் கூடுதல் (= புணர்தல்), கூட்டம்பெறாமை யென இரண்டாக வகுத்து, கூட்டம்பெறாமையுள் பிரிதல் முதலிய வனை நான்கையு மடக்குவர். கூட்டம்பெறாமை யென்பது பூர்வராகம், மானம், பிரவாசம், கருணம் என நான்கு வகைப்படு மென்பர். பூர்வராகமென்பது தமிழிற் கைக்கிளைத் திணைபோல்வது. மானம் என்பது ஊடலையும், பிரவாசம் என்பது பிரிதலையும் இருத்தலையும், கருணம் என்பது இரங்கலையும் குறிப்பனவாம். ஆகவே இந் நூலிலும் கவி ஐந்திணைப் பொருளையும் அகத்திணையியல் வழாது வருணித்துச் செய்யுள் செய்திருத்தல் இந்நூலை நன்கு நாடிப் படிப்போர்க்குச் செவ்விதிற் புலனாமென்றறிக. உதாரணமாக:

இந் நூலின் முதற் சருக்கமாகிய முதுவேனிற் பருவ வருணனையை நோக்கின்:— சூரியன் மிக உக்கிரமாக எறித்தலும், இரவு நிலாப்பொருந்திக் குளிர்ந்தினிதாதலும், ஆடவரும் பெண்களும் வெம்மைதீரப் பல்காற் பூஞ்சுனையாடலும், காமவின்பம் கைம்மிகாது கட்டுப்படுதலும் (செய். 1); செயற்கை நீரருவிகளும் பனிநீரும் சந்தனமும் நிலாமுற்றமும் முத்துமாலையும் யாமத்து வீணையின்னிசையும் சங்கீதமும் என்பன இளங் காதலர்க்குத் தாபத்தைக் குறைத்து இன்பஞ் செய்தலும்; மகளிர் இக்காலத்துக்கேற்ற மென் பட்டாடை யணிதலும்; விலங்கும் பறவையும் வெய்யில் வெப்பத்தினுல் தியங்கி வலியிழந்து தம்முள் இயற்கையாயுள்ள பகையையும் மறந்து ஒன்றி ஒழுகுதலும்; சூரிய வெப்பத்தாற் குளங் குட்டைகளெல்லாம் நீர் வற்றிப் போக விலங்கினம் விடாயால் மெலிந்து நீர்தேடி யலைதலும்;

காடெங்கும் காட்டுத்தீ சுவாலைவிட்டுப் பரவி மரம் செடி கொடிகளை யெரித்தலும்; வெஞ்சுரத்துச் சென்றவன் பிரிவுத் துயராலும் வெப்பத்தாலும் தாபமுறுதலும் (செய். 10); இல்லிற் பிரிந்து வழிச்சென்றோர் மாலைக் காலத்தையும் இள மங்கையரையுங்கண்டு விரக முறுதலும் (செய். 12); இள நங்கையர் பூந்தண்சுனையாடியும் வேனிலிற் பூக்கும் பாதிரி மலர் மாலையணிந்து இரவில் நிலாமுற்றத்திருந்து கீதவாத்திய கானஞ்செய்தும் வேனில் வெம்மையைப்போக்கி யின்புறுத லும் (செய். 28); என்னும் இன்னோரன்ன செய்திகளைக் காணலாம். இனி, இவற்றோடு,

"நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு,"

என்னும் தொல்காப்பியச் சூத்திர உரையில் வேனிலைப்பற்றிக் கூறும் பகுதியாகிய:— "காலையும் மாலையும் நண்பகலன்ன கடுமைகூர, சோலை தேம்பி, கூவல் மாறி, நீரும் நிழலும் இன்றி, நிலம்பயன் துறந்து, புள்ளும் மாவும் புலம்புற்று, இன்பமின்றித் துன்பம் பெருகுவ தொருகாலமாதலின், இன் பத்திற்கு இடையூறாகிய பிரிவிற்கு நண்பகலும் வேனிலும் சிறப்புடைத்தாயிற்று", என்னும் இதனை ஒப்பவைத்து நோக்கின் இரண்டிற்குமுள்ள ஒற்றுமை எத்துணைத்தென்பது தெள்ளிதிற் புலப்படுவதாம். ஏனைய சருக்கங்களையும் இப்படியே யாராய்ந்து ஒப்புநோக்கிக் கண்டு கொள்க. விரிவஞ்சி விடுத்தனம்.

இருது சங்கார காவியத்தில் ஆறு பருவகாலத் தோற் றங்களும் அவற்றாற் காதலருளத்து நிகழும் உணர்ச்சிகளும் மிக அழகாக வருணிக்கப்பட்டுள்ளன. இக்காவியம் சிருங் கார ரசப்பிரதானமானது. இது ஆறு சருக்கங்கள்கொண் டது. ஒவ்வொரு சருக்கத்திலும் ஒவ்வோர் இருது வரு ணனை வரும். இந்த வருணனை ஒரு காதலனோ, கவி தானோ, தன் காதலியை விளித்துச் சொல்வதாக அமைந் தது. ஒவ்வொரு சருக்கமும் அதன்கண் வருணனை செய் யப்பட்ட இருது காதலிக்கு எல்லா நலன்களையும் நல்குக வென வாழ்த்தும் ஒரு வாழ்த்துச் செய்யுளைக்கொண்டு

முடியும். இக் காவியத்தில், காளிதாச கவிதையின் தனிச் சிறப்பாகிய உவமை நலங்களும், அரிய கற்பனைகளும், உருவகங்களும், தன்மை நவிற்சியு மென்னும் அழகுகள் பொலிந்து விளங்கிப் படிப்போர்க்கு இன்பம் பயப்பனவாக வமைந்துள்ளன. முதற் சருக்கத்தில் வரும் காட்டுத் தீ வருணனை (செய். 22—26) படித்தின்புறத் தக்கது.

இக் காவியத்துள்ள சில இன்கவிகள் வருமாறு :—

சரு. (i) செய். 1, 22, 28; சரு. (ii) செய். 29, 32, 34, 35, 40, 42, 51, 52, 56; சரு. (iii) செய். 57, 60, 63, 66, 73, 77, 78, 79, 82; சரு. (iv) செய். 83, 91, 92, 93, 100; சரு. (v) செய். 101, 102, 116; சரு. (vi) செய். 117, 118, 130, 131, 132, 135, 138, 144.

**தி. சதாசிவ ஐயர்**

சுன்னாகம்
*1-5-49*

உ

அம்மை யப்பர் துணை.

# இருது சங்கார காவியம்

## பாயிரம்

1. இருந்து சங்கதத் திருதுசங் காரசிங் கார
விருந்து தந்தனன் காளிதா சக்கவி வேந்து
பொருந்து மன்னதைப் புனைகுவன் தமிழ்க்கவி யாக
முருந்து வாணகை பங்கமர் முன்னவ னருளால்.

வேறு

2. ஆரி யத்தின மைந்தவிக் காவியஞ்
சீரி யற்றமிழ்ச் செல்வருந் தேர்கென
நேரி யன்ற தமிழ்க்கவி நேர்ந்தனன்
நாரி யன்ற சதாசிவ நாமனே.

பாயிரம் முற்றிற்று.

---

1. திருந்து — சுத்தமான, இலக்கணவரம்பமைந்த; சங்கதத்து — வடமொழியில், சங்கதம் சம்ஸ்கிருதம் என்பதன் சிதைவு; இருது சங்காரம் — நூற்பெயர்; இருது — பருவகாலம், சங்காரம் — கூட்டம்; ஆறு பருவ வருணனையும் ஒருங்கு அடங்கிய நூலென்பது கருத்து. சிங்காரம் — இன்பச்சுவை (சிருங்காரரசம்) பொருந்திய: விருந்து — புதுமை; இங்கு புதுமை வாய்ந்த நூல்; புனைகுவன் — செய்குவன், அமைப்பேன். முருந்து — இறகின் அடிக்குருத்து: முருந்து வாணகை என்றது உமாதேவியாரை.

2. தேர்கென — தேர்க என, தெரியும்படி; நேரியன்ற தமிழ்க்கவி யென்பது முதனூற் செய்யுட் பொருளைக் கூட்டுதலும் குறைத்தலுமின்றி அப்படியே கூறுந் தமிழ்க் கவி யென்பதாம். ஆகவே முதனூலில் எத்தனை சுலோக முண்டோ அத்தனை செய்யுளே இந்நூலிலும் உண்டு என்பதாயிற்று. நார் இயன்ற — (தமிழறிஞர்க்கு இதனைத் தெரிவிக்க வேண்டுமென்னும்) அன்பு பொருந்திய; நார் — அன்பு; இனி, நாரின் தன்மை பொருந்திய எனப் பொருள்கொண்டு; "பூவுடனே கூடிய நார் புனிதர் முடிக்கணியாமால்" என்றதுபோல், காளிதாச மகாகவியின் கல்பனாசித்திர மலர்கள் தொடுக்கப்பெற்ற (மொழிபெயர்த்தலாகிய) நாரின் தன்மை யமைந்ததே இந்நூலாக்கியோனது செயலுமாதலின், இந்நூலையும் தமிழறிஞர்கள் உவந்து ஏற்றுக்கொள்வரென அவையடக்கங் கூறியதாகக் கோடலு மொன்று.

# இருது சங்கார காவியம்

## முதற் சருக்கம்

### முதுவேனிற் பருவ வருணனை

1. செங்கதிர்ச் செல்வன் றெறுகரம் விரிப்பத்
தெண்ணிலா மனமகிழ் விளைப்பப்
பொங்கதி தாபம் போக்கிய பல்காற்
பூம்புன லாடலும் பொலியத்
தங்குதி வாவின் கடையினி தாகத்
தணிவுறக் காதலின் வேகஞ்
சங்கதிர் முன்கைத் தையனல் லாய்காண்
தழல்முது வேனில் சார்ந்ததுவே.

2. மண்டிய நீல படலம தகற்றி
மதிதிகழ் நிசிகளுந் தாரை
கொண்டியல் நீரா விமண்டப வகையுங்
குளிர்மணி விதங்களுஞ் சாந்தின்
அண்டிய தேய்வை செறிபணிக் குழம்பும்
அடுத்தவிவ் வேனிலங் காலை
வண்டிவர் கோதாய் மாந்தருக் கிதமாய்
மனமகிழ் பூப்பவாய்ந் தனவே.

---

1. செங்கதிர்ச்செல்வன் – சூரியன்; தெறுகரம் – சுடுகின்ற கிரணம்; போக்கிய – போக்கும்படி, போக்க; தங்கு – நிலைத்த, நீண்ட; திவா – பகல்; வேனிற் காலத்துப் பகலாதலின் நீண்ட தெனப்பட்டது. கடை – இறுதி, மாலைக் காலம் என்றபடி; தழல் – தழலுகின்ற, சுடுகின்ற; சங்கு அதிர் – சங்கு வளையல் ஒலிக்கின்ற; தையல் நல்லாய்–மகடூஉ முன்னிலை; ஒவ்வொரு பருவ காலத்து நிகழ்ச்சிகளையுங் காட்சிகளையும் ஒரு காதலன் தன் காதலிக்கு வருணித்துக் கூறுவதாகக் கவி இந்நூலை யமைத்திருக்கிறார். அதனால் ஒவ்வொரு பருவ வருணனைத் தொடக்கத்திலும் சிறுபான்மை இடையிலும் மகடூஉ முன்னிலை வருதல் காண்க.

2. நீலபடலம் – கரிய முகிற் கூட்டம்; நிசி – இரவு; தாரை கொண்டு இயல் – நீர்த்தாரையைச் சொரியும் யந்திரம் அமைக்கப் பட்ட; நீராவிமண்டபம் – நீர் நடுவிற் கட்டிய ஸ்நாநமண்டபம் (Bath rooms fitted with artificial fountains). தேய்வை – அரைத்த சந்தனம்; வண்டிவர் கோதாய் – மகடூஉ முன்னிலை; கோதாய் – கூந்தலையுடைய பெண்ணே!

3. விரைதவழ் வுற்று விழைதரு மாடத்
தும்பரு மின்னனார் முகத்து
விரைதரு சுவாசத் தசைவுறு மதுவும்
மேவுமிவ் வேனிலம் போது
நிரைதரு யாமத் தின்பினை மூட்ட
நேர்வரு வீணையி னிசையும்
புரைதவிர் காதற் காளையர்க் கெல்லாம்
போகமு நுகர்ச்சியுந் தருமால்.

4. காமரு பட்டுங் காஞ்சியு மணிந்து
கவினுறு கடிதடம் முத்துத்
தாமமுஞ் சாந்தும் அணிகளுஞ் சுமந்த
தனபரந் தண்விரை நாகத்
தாமதி சுகந்த அளகமென் றின்ன
வாகிய தாங்கணி யிழையார்
ஏமரு வேனிற் றாபம தகற்றி
யிளைஞருக் கின்பமூட் டுவரால்.

வேறு

5. பஞ்சி தோய்ந்ததி செம்மைய பைம்பொனின் மிளிரும்
அஞ்சி லம்பின அவனியிற் படும்படும் தோறும்
அஞ்ச மென்னவே யரற்றுவ வாயசிற் றடியால்
வஞ்சி யன்னவர் காளையர் மனத்துமால் வளர்ப்பார்.

---

3. விரை – வாசனை ; விழைதகு – விரும்பத்தக்க ; உம்பர் – மேல் நிலம், மாடத்தும்பர்–நிலாமுற்றம் (terrace) ; நேர்வரு – ஏற்றதாகிய.

4. காஞ்சி – மேகலை ; கடிதடம் – அரை ; தாமம் – மாலை; அணி – ஆபரணம் ; விரை – வாசனைப்பொடி ; நாகம் – ஸ்நாநம், நீராடல் ; ஏமரு – கலக்கத்தைச் செய்கின்ற ; தாபம் – வெப்பம்.

5. பஞ்சி – செம்பஞ்சுக் குழம்பு ; செம்மைய – சிவந்தன ; அவனி – பூமி, நிலம் ; அஞ்சம் அன்னப்பறவை ; வஞ்சி – பூங்கொடி ; மால் – ஆசை, மையல்.

6. சந்த மார்ந்தி தட்பமாய்த் தண்பனி வெண்மை
தந்த முத்தணி தாங்கிய தனங்களும் பொன்னின்
வந்த மேகலை வயங்குநுண் ணிடைகளும் வலிந்தே
எந்த ஆடவ ரிதயங்கா முறும்வகை செயாவால்.

7. வியர்வு தோன்றுபு விரியுடன் மூட்டினர் விம்மி
உயர்வு சேர்கன தனத்திள முவதிய ரின்னே
யயர்வு தீர்தர ஆடைகள் கனத்தவை யகற்றித்
துயர்த ராதமென் துகில்கொடு நகிலிணை தூர்ப்பார்.

8. சாந்த நீருறை தந்தசை சிவிறிமென் காலும்
ஏய்ந்த முத்தணி யேந்திய விளமுலை யிசைவும்
வாய்ந்த வீணையொ டெழுதரு மதுரநல் லிசையும்
ஒய்ந்த காதலை யுணர்த்துவ போலுமா லின்னே.

9. வெள்ளை மாடத்து நிசிதனில் மின்னனர் துயில்போ(து)
அள்ளு வாண்முக மாசையி னீடுற நோக்கித்
தெள்ளு தண்கதிர்த் திங்களஞ் செல்வன்பின் னிரவி
லுள்ளு நாணினற் போலுடல் விளர்க்குமா லுறுதி.

---

6. சந்தம் ஆர்ந்து — சந்தனத்தில் தோய்ந்து; காமுறும்வகை — ஆசைகொள்ளும்படி.

7. தோன்றுபு — தோன்றி; விரி — விரிந்த, பரந்த; மூட்டு — சந்து; உவதியர் — இளம்பெண்கள்; நகில் இணை — இரண்டு தனங்களையும்; தூர்ப்பார் — மறைப்பார்; வியர்வு உடற்சந்துகளில் தோன்றி யுடலெங்கும் பரவப்பெற்ற உவதியரென்க.

8. சாந்த நீர் — சந்தனங் கலந்த நீர்; உறை — திவலை, துளி; நீர்உறை தந்து — நீர்த்திவலைகளைச் சிந்தி; சிவிறி — விசிறி, வெட்டிவேர் முதலியவற்ருல் செய்தவை; மென்கால் — மெல்லிய காற்று; இசைவு — பொருந்துதல், அணைத்தல்; ஒய்ந்த — உறங்கின, தணிவுற்ற; உணர்த்துதல் — எழுப்புதல்; இன்னே — இவ்வேனிலில்-

9. அள்ளு — (மனத்தைக்) கவருகின்ற, கவர்ச்சி பொருந்திய; உள்ளும் — மனத்திற்கொண்ட; உறுதி — நிச்சயம். இரவு விடிகிற சமயத்தில் சந்திரன் ஒளியிழந்து மங்குதல் இயற்கை; நிலா முற்றத்தில் துயிலும் நங்கையர் முகத்தை நீடுநோக்கிய சந்திரன், (1) அவர்கள் முகத்துக்குத் தான் தோற்றதனல், இன்றேல், (2) பிறர் மனைவியர் முகத்தைக் களவாகத் தான் பார்த்த குற்றத்தினல், வெட்கமுற்று அதனல் மேனி மழுங்கினன் எனக் கவி வேறு காரணம் புனைந்து கூறுதல் தற்குறிப்பேற்றம் என்னும் அலங்காரம்.

வேறு

10. தாங்கரு வேனிற் காற்றுத்
தருந்துகட் படலை தாங்கி
வீங்குருப் பஞ்சேர் வெய்யோன்
வெதுப்பவேந் தரணி தன்னைப்
பூங்குழ லார்ப்பி ரிந்து
வழிச்சென்றோர் புலம்பு வாட்ட
எங்குநெஞ் சகத்த ரீண்ட
நோக்கலு மியல்கி லாரால்.

11. பொங்குவெங் கதிரோன் வெப்பம்
பொலிந்துடல் புலர்த்த நீடு
தங்கதி தாகந் தன்னால்
தாலுமிக் குலர்ந்த மான்கள்
சிங்குறப் பொடித்த மையிற்
றிகழ்தரு நீல வானை
யங்குறக் கண்டு நீரென்
றோடுவ அடுத்த கானம்.

---

10. வேனிலால் நேரும் இன்ப அனுபவங்களைக் கூறி, இனி, துன்ப அனுபவங்களை வருணிக்கின்றார் கவி. துகள் — புழுதி; படலை — கூட்டம்; வீங்கு — மிகுந்த; உருப்பம் — வெப்பம்; வேம் — வெம்பும், சுடும்; தரணி — பூமி, நிலம்; புலம்பு — பிரிவு, தனிமை; ஈண்ட நோக்கல் — உற்றுப்பார்த்தல். எலவே பிரிவாற் கலங்கியவர்கள் வெஞ்சுரத்துச் செல்லும்போது அடியைச் சுடும் வெப்பத்தால் நிலத்தை யுற்று நோக்கவும் இயலாதவரானரென்பதாம்.

11. புலர்த்த — காய்ச்ச, வாட்ட; தாலு — நா; சிங்குற — குறைய, சிறிதாகும்படி; பொடித்த — பொடிசெய்த; மையில் — மைக் கட்டிபோல. காட்டுமரச் செறிவுக்கிடையே நீலவானந் தோற்றக் கண்டு அதனை நீரென்றெண்ணி அத்திசையாக அடுத்த காட்டுக்குள் ஓடுகின்றன வென்பதாம். இது மயக்கவணி.

12. திங்களா மணிப்பூண் சேர்ந்து
    திகழ்வுறு மணங்க ளூர்தம்
அங்கநே ரிங்கி தத்தா
    லமர்நகைக் கடைக்க ணோக்கால்
அங்குநேர் மாலை யென்ன
    ஆடவ ரகலச் சென்றோர்
தங்களீ ரிதயந் தன்னில்
    தணிப்பருங் காதல் சேர்ப்பார்.

13. ஆதவன் கிரணஞ் சால
    அழற்றவா றதனில் வெந்து
பாய்துகள் கனற்ற மெய்யைப்
    பதைப்புறு படவ ராப்பார்
மீததோ முகமாய்ச் சுற்றி
    யூர்ந்துவெய் துயிர்த்தே தற்குப்
பேதகம் விளைப்ப தாய
    பிணிமுகத் தடியில் வைகும்.

---

12. பிரிந்து சென்றோருள்ளத்தில் காதலுணர்ச்சி பெருகுவதற்குப் பெண்களும் மாலைக்காலமும் காரணமாதலை இச்செய்யுள் கூறுகின்றது. திங்களா மணிப்பூண் சேர்ந்து திகழ்வுறும் என்பதற்கு, (1) சந்திரனைப்போலப் பிரகாசிக்கின்ற இரத்தினுபரணங்களை யணிந்து விளங்குகின்ற எனப் பெண்களுக்கும், (2) சந்திரனாகிய அழகிய ஆபரணத்தைத் தாங்கி விளங்குகின்ற என மாலைக்காலத்துக்கும் பொருந்தப் பொருள் கொள்க. இது செம்மொழிச் சிலேடை. இங்கிதம் — குறிப்பு; அமர் — வருத்துகின்ற; நகை — புன்முறுவல், கண்டாரை வருத்துகின்ற புன்முறுவலோடுகூடிய கடைக்கண் பார்வை யென்க. அங்கு நேர் மாலை — அவ்விடத்துத் தோற்றும் மாலைக்காலம் போல; ஈர் இதயம் — இனிமை பொருந்திய உள்ளம்.

13. ஆறு — வழி; பாய் — பரந்த; அதோமுகமாய் — தலைகவிழ்ந்து; பேதகம் — பகை, வஞ்சம்; பிணிமுகம் — மயில். வேனில் வெப்பம் மிகவும் வாட்ட அதனினின்றும் தப்புவதற்குச் செய்யும் முயற்சியில் பிராணிகள் தங்கள் இயற்கையான பகையையும் மறந்து ஒழுகுகின்றன என்பது தாத்பரியம்.

14. மிகுதரு தாகம் விஞ்சி
விசைத்தெழு விறலை வீட்டப்
பகுதரு வாய்செய் பஞ்சா
னனம்பட ருளைசி லிர்த்துத்
தொகுதரு நாமுன் தொங்கத்
தொடர்ந்துவெய் துயிர்த்து நாளும்
பகைதரு மதமா பாங்கர்ப்
படரினும் பாய்ந்த டாதால்.

15. புலர்தரு மிடற்றுப் போந்த
புன்னுரை நீர வாகி
யலரிதன் கிரணத் தீயா
லங்கம்வே வுற்று மேன்மேல்
மலர்தரு தாகம் வாட்ட
வாரிதேர் மதமால் யானை
கொலைதரு மடங்க லேற்றைக்
குறுகினுங் குறிக்கொள் ளாதால்.

16. இழுதுறு மோமத் தீயி
னெரியின்ன் கிரண மங்கம்
முழுதுற வாட்ட வெம்பி
மொய்ம்பழி மனத்த வாகி
யிழிதக வுற்று மஞ்ஞை
யெழிற்கலா பத்து ளுச்சி
நுழைதரக் கிடந்த பாந்தள்
நூறல்செய் நோக்கி லாவே.

---

14. விஞ்சி — அதிகப்பட்டு; விசைத்தெழு — விசைகொண்டு பாய்கின்ற; விறல் — வலிமை; வீட்ட — கெடுப்ப; தாகம் விறலை வீட்ட என்க. பகுதரு வாய்செய் — வாயை யகல விரித்த; பஞ்சானனம் — சிங்கம்; உளை — பிடர்மயிர்; தொகுதரு — (தாகத்தாற்) சுருங்கிய, மதமா — யானை.

15. நீர — நீரையுடையன; அலரி — சூரியன்; மலர் தரு — பரக்கின்ற, விரிகின்ற; வாரி — நீர்; மடங்கலேறு — ஆண் சிங்கம்; குறுகினும் — எதிர்ப்படினும்; குறிக்கொள்ளாது — மனத்துக்கொள் ளாது, அஞ்சாது என்றபடி.

16. இழுது — நெய்; ஓமத் தீயின் — ஓமாக்கினிபோல; எரி — எறிக்கின்ற, சுடுகின்ற; இனன் — சூரியன்; மொய்ம்பு — வலிமை, உறுதி; இழிதகவு — எளிமை, இழிவு; பாந்தள் — பாம்பு; நூறல் செய் — அழித்தலைச் செய்யும்; மஞ்ஞை பாந்தளை நூறல் செய் நோக்கிலா எனக் கூட்டுக.

17. கந்தமார் கோரை சார்ந்த
காய்கமர் வாவிச் சேற்றைக்
குந்தநேர் தடநீள் கோட்டாற்
குறித்தகழ் கேழல் வெய்யோன்
தந்தவா தபத்தால் மேனி
சாம்புசந் தாபந் தீரச்
சந்தமா ரவனி தன்கீழ்ச்
சார்வது போலு மன்றே.

18. காய்தரு கதிரின் செல்வன்
கனற்றலின் வெதும்பி மேனி
ஓய்தரு தவளை சேற்று
நீருறை யோண்ட நின்று
பாய்தரு வுழிநீர் வேட்கை
பற்றிய பன்ன கத்தின்
பாயிரும் படமா மாத
பத்திரத் தடியில் வைகும்.

19. தடம்புகுந் தங்க ணுற்ற
தாமரை முழுதுஞ் சாடி
யொடுங்கிடச் சிதைத்து மீனை
யுணங்குசா ரசப்புள் ளோட்டி
யுடம்புட னுடம்பு தாக்க
ஒன்றுசேர்ந் துடற்றி யானை
திடம்படச் செய்வ காலாற்
சேற்றினை யுழக்கி யம்மா.

---

17. கந்தம் — கிழங்கு; கமர் — வெடிப்பு; குந்தம் — ஈட்டி, வேல்; தடம் — வளைவு; கேழல் — ஆண்பன்றி; ஆதபம் — வெப்பம்; சாம்புதல் — வாடுதல், ஒடுங்குதல்; சந்தாபம் — துன்பம்; சந்தம் ஆர் - (தான் அகழ்ந்த) துவாரம் பொருந்திய, தற்குறிப்பேற்ற அணி.

18. ஓய்தரு — தளர்ந்த; நீர் உறை — நீர் வற்றிய, ; பாய்தரு வுழி — பாய்ந்து செல்லுமிடத்து; பாய் இரும் — பரந்த பெரிய; ஆதபத்திரம் — குடை.

19. தடம் — தடாகம், குளம்; உணங்குதல் — வாடுதல், மெலிதல்; சாரசம் — வெள்ளைநாரை, கொக்கு; உடற்றுதல் — வருத்துதல், பொருதல்; திடம்பட — வயிரமுற, உறுதிபெற; யானை புகுந்து, சாடி, சிதைத்து, ஓட்டி, உழக்கிச் செய்வ என வினை முடிக்க.

20. சூரிய கிரணந் தோயச்
சுடர்மணி யுச்சி தாங்கி
யீரிய னாமு னீட்டி
யியல்வளி யுணாச்சு வைக்கும்
பாரிய படமா நாகம்
படுவிடம் தீவெய் யோனுஞ்
சேரியல் வெதுப்ப நீர்வேட்
டடுகில தேரை யீட்டம்.

21. பொருந்திய நுரைசூழ் வாயும்
புறத்துநீள் தருசெந் நாவும்
விரிந்துநீள் தலையு மாய்ப்பெண்
மேதியி னீட்டஞ் சால
வருந்திவெவ் விடாயால் மன்னு
மலைமுழைஞ் சதனி னீங்கி
யருந்திய நீரைத் தேடி
யலமந்து திரியு மாலோ.

வேறு

22. வீறு கொண்டெ ழுந்த தாவம்
வீட்ட வேமி ளம்புலும்
மாறு கொண்டு டற்று வாயு
வாற்ப ரம்பு சருகரும்

20. சுடர் மணி — சுடருகின்ற (ஒளி வீசுகின்ற) நாக ரத்தினம்; ஈர் இயல் நா — இரண்டாகப் பிரிந்த நா; இயல் வளிஉணா — காற்றாகிய இயற்கை உணவு; படுவிடம் — (தன்னிடத்தில்) உற்பத்தியாகும் நஞ்சு; தீ — காட்டுத் தீ; வெய்யோன் — சூரியன்; சேர்இயல் — ஒன்றாகச் சேர்ந்த தன்மை; நாகமானது படுவிடமும் தீயும் வெய்யோனும் ஒன்றாகச் சேர்ந்து வெப்பம் செய்தலால் மிகத் துன்புற்றது என்பது கருத்து.

21. மேதி — எருமை; மன்னு — உறைவிடமாயிருந்த; அருந்திய — அருந்த, குடித்தற்கு; அலமந்து — துன்பமுற்று, மனங்கலங்கி.

22. இது முதல் ஐந்து செய்யுளும் காட்டுத் தீயின் வருணனை. தாவம் — காட்டுத்தீ; வேம் — வேகின்ற, பற்றி யெரிகின்ற; மாறு கொண்டு உடற்று — எதிராக வீசி யடிக்கின்ற; சருகர் — சருகு,

வாறு கொண்ட வெயில் வெதுப்ப
வற்று நீர்க்கி டங்குமாய்த்
தூறு கொண்ட கான கங்கள்
துண்ணென் காட்சி தருவுவால்.

23. பச்சி லைக ளற்ற பாத
பத்தி ளைக்கும் புள்ளினம்
உச்சி மாம லைக்கு கைக்கு
ளோடு மர்க்க டக்குலம்
நச்சி நீர்கு டிக்க வெங்கு
நாடி யோடுங் கவயமா
குச்சி தம்மில் சரப நீடு
கூப நீர்கு டிக்குமால்.

24. கட்ட விழ்கு சும்ப மேய்ந்து
காந்து சிந்து ரம்நிகர்த்
தெட்டு கின்ற திசைக ளெங்கு
மிம்மெ னப்ப ரந்ததீ

---

(போலி); வாறு — வலிமை; தூறு — பற்றை, புதர்; கான் அகங்கள் — காட்டில் அங்கங்குள்ள இடங்கள்; துண் என் — அஞ்சத் தகும், திடுக்கிடச் செய்யும்.

23. பாதபத்து — மரத்தில்; பாதபம் — மரம்; இலைகள் பழுத்துச் சொரிந்துபோன வெற்றுமரக் கொம்பரில் பறவையினம் சேர்ந்து பெருமூச்சுவிட்டு இருக்கும் என்க. மர்க்கடக்குலம் — குரங்குக் கூட்டம்; நச்சி — விரும்பி; கவயமா — காட்டுப்பசு; கவயமாநீர்குடிக்க நச்சியெங்கும் நாடியோடும் எனக்கூட்டிப் பொருள் கொள்க. குச்சிதம் இல் — இழிவு இல்லாத, இகழத்தகாத; சரபம் என்பது (1) எண்காற் பறவைக்கும், (2) விட்டிலுக்கும், (3) ஒட்டகத்துக்கும் பெயராகும். இங்கு இவற்றுள் எதனைக் குறித்து இச்சொல் வழங்கப்பட்டதெனத் திட்டமாகச் சொல்ல முடியாது. எனினும், ஆழமான கூபத்திலுள்ள நீரை யெடுத்துக் குடிக்கும் என்றதனால், இதற்கு ஒட்டகம் எனப் பொருள் கொள்ளல் பொருந்துவதாகும்.

24. கட்டு அவிழ் — முறுக்கு அவிழ்ந்த, விரிந்த; குசும்பம் — குசும்பப்பூ, செந்துருக்கம்பூ; எய்ந்து — ஒத்து; காந்து — ஒளி செய்கின்ற; சிந்துரம் — சிவந்த வர்ணமான லோகப்பொருளின்

மட்டில் கொம்பர் கொடிம ரங்கள்
வாஞ்சை யின்ன ணைத்தெனச்
சுட்டெ ரித்த தாலி டங்கள்
தூண்டு காற்று வேகத்தால்.

25. காட்ட னல்கி ரிக்கு கைக்குட்
காலொ டேகி யோலிடும்
வாட்ட முற்ற டர்ந்த மூங்கில்
மண்டி யேவெ டித்திடும்
காட்டை யிற்க ணன்றெ ழுந்து
கணமு றும்பு லிடையுறும்
வீட்டு மால்வ னத்தி னெல்லை
மேவி மாவி னத்தையே.

26. நீடு சால்ம லித்த ருக்கள்
நீற்றும் பஃறீ யுற்றென
மாடு சால்நி றத்தொ டங்கு
மரமு ழைஞ்சி லெழுதரும்
பாடு சேரி லைகள் கொம்பர்
பற்றி யேமரத் தெழும்
காடு மேடு மெங்கு மாய்க்
கனன்று தீசு லாவுமால்.

---

பொடி (Red Lead). எய்ந்து நிகர்த்துப் பரந்த தீ யென்க. மட்டு இல் — அளவில்லாத.

25. காட்டு அனல் — காட்டுத் தீ; கிரி — மலை; காலொடு — காற்றோடு சேர்ந்து; வாட்டமுற்ற — காய்ந்த, உலர்ந்த; வெடித்திடும் 'படார்' எனப் பெரிய சத்தத்தை யுண்டாக்கும். காட்டையில் — கணநேரத்தில்; கணமுறும் புல் — புல்லுக்காடு; வனத்தின் எல்லைமேவி மாஇனத்தை வீட்டும் என்க. மா இனம் — மிருகக் கூட்டம்.

26. சால்மலி — இலவு; நீற்றும் — நீறாக்கும், எரிக்கும்; பஃறீ — பலதீ; தீ இலவமரத்திற் பற்றி யெரியும்போது, அதன் காய்கள் தனித் தனியே எரிவது அவ்வொருதீ பலதீயை யுண்டாக்கியதுபோலத் தோற்றுமென்பதாம். மாடு — பொன்; மரப்பொந்திற் பற்றி யெரியும்போது தீ பொன்னிறமாகத் தோற்றுகின்றது. பாடு — கேடு, அழிவு; பாடுசேர் — உலர்ந்த; சுலாவும் - சுற்றும், சுழலும்.

வேறு

27. வெந்த மேனி வேழமொ டாமா விறற்சீயம்
முந்தும் வைர முற்றும றந்தே நட்டார்போல்
செந்தீ வாட்டச் சேர்வன நீத்தே விரைந்தோடி
வந்தே யாற்று வார்மணல் சேர்ந்து வைகுற்ற.

வேறு

28. பதுமவனத்தடம் புனலும் பாதிரிமென்
போதுமகிழ் பரப்ப மேனிக்
கிதமளிக்கும் புனலாட்டு மிளமதியும்
பூந்தொடையு மின்ப மூட்ட
அதிமதுர கீதமுமன் பார்ந்தசகி
மார்களுமா யணங்கே மாட
விதுமலிமீ தலத்திரவு மிகுசுகநீ
மேவுகவிவ் வேனிற் காலை.

முதற் சருக்கம்

முதுவேனிற் பருவ வருணனை முற்றிற்று.

---

27. வேழம் — யானை; ஆமா — காட்டுப்பசு; விறல் — வலிமை; சீயம் — சிங்கம்; முந்தும் வைரம் — தமக்குள் இயற்கையாக முன்னிருந்த பகையை; நட்டார் — நண்பினர்; வார்மணல் — வார்ந்த மணல், ஒழுங்குபட்ட மணலிடம்; சேர்ந்து — (1) அடைந்து, (2) ஒன்றுகக் கூடி.

28. இச் செய்யுள் காதலிக்குக் கூறும் வாழ்த்து; வேனிற் காலத்துப் பெறத்தகும் சுகபோகானுபவங்களைத் தொகுத்துக் கூறுந் தன்மையது. ஏனைய ஐந்து சருக்க முடிவிலும் இவ்வாறு வருதல் காண்க.

பதும வனம் — தாமரைக் காடு, தாமரையை மிகுதியாக வுடைய என்பது கருத்து; தடம் — தடாகம்; பாதிரி — பாதிரி மரம்; போது — மலர், பூ; பாதிரிமரம் வேனிற்காலத்துப் பூப்பதென்பது.

"வேனிற் பாதிரிக் கூன்மல ரன்ன"

எனக் குறுந்தொகையிலும் (147), 'வேனிற்கட்பாதிரி' யென நன்னூல் மயிலைநாதர், சங்கர நமச்சிவாயர் உரைகளிலும் வருதலால் அறியலாம். பூந்தொடை — மலர்மாலை; அணங்கே — நங்காய்; மகடூஉ முன்னிலை; மாடமீதலம் — மாடத்துச்சி, நிலா முற்றம்; விதுமலி — நிலாப்பொருந்திய; விது — சந்திரன்; மேவுக — பொருந்துக, அடைக,

# இரண்டாம் சருக்கம்

## கார்ப் பருவ வருணனை

29. துளிதரு மேக மத்தவா ரணமுஞ்
சுடர்தரு மின்னலங் கொடியுந்
தெழிதரு மசனி முரசுமென் றின்ன
சேர்தரு வரிசையிற் பொலிய
ஒளிதரு சிறப்பி னுயர்ந்துமன் னவரை
யொத்துமெய்க் காதலர்க் கென்றுங்
களிதரு நண்ப தாகிய காரீண்
டடுத்தது காண்டிபெண் ணமுதே.

30. நீலமார் குவளை நீண்மலர்க் காந்தி
நிகர்த்தொரு பால்மிக நெகிழ்ந்த
சாலமார் நீலாஞ் சனவொளி யொருபாற்
சார்ந்துசூல் தாங்கிள மடவார்
கோலமார் முலைச்சூ சுகநிற மொருபாற்
கொண்டுயர் பயோதரக் குழாங்கள்
ஏலவார் குழலாய் எங்கணும் விசும்பி
லிடையறு தீண்டுவ மாதோ.

---

29. இச் செய்யுளிற் கார்ப்பருவம் ஒரு பெரிய அரசனுக்குஒப்பாகச் சொல்லப்படுகிறது. அரசருக்குரிய பட்டத்து யானை கொடி முரசுமுதலிய ராசவரிசைகளோடு காரானதுதோற்றமளிக்கின்றதாம்.

மத்தவாரணம் — மதம்பொருந்திய ஆண் யானை, அரசுவா; தெழிதரும் — முழங்குகின்ற; அசனி — இடி; என்றின்ன — என்ற இன்ன, என்னும் இவைகள்; சேர்தரு — (அரசர்க்குரியனவாகப்) பொருந்திய; வரிசையில் — இராச சின்னங்களாக; பொலிய — விளங்க; கார் உயர்ந்து ஒத்து அடுத்தது, என்க. பெண்ணமுதே மகடூஉ முன்னிலை. காண்டி — காண்பாயாக; முன்னிலை யசை யெனினுமாம். உவமை.

30. நெகிழ்ந்த — பொடிசெய்த, தூளான; சாலம் ஆர் — கூட்டமாகிய, மிகுதியான; நீல அஞ்சனம் — கரிய மைக்கட்டி, கல்லீயம்; சூல் — கருப்பம்; கோலம் — அழகு; சூசுகம் — முலைக் காம்பு; கர்ப்ப ஸ்திரீகளின் முலைக் காம்பு நீலநிறம் அடைந்திருப்பதால் உவமானமாயிற்று. பயோதரம் — முகில்; ஏலவார் குழலாய் — மயிர்ச் சாந்து பூசிய நீண்ட கூந்தலையுடைய பெண்ணே; மகடூஉ முன்னிலை. பயோதரக் குழாங்கள் ஒருபால் குவளைமலர்க் காந்தி நிகர்த்து, ஒருபால் நீலாஞ்சன ஒளி சார்ந்து, ஒருபால் சூசுக நிறங்கொண்டு விசும்பில் எங்கணும் இடையறுது ஈண்டுவ எனக்கூட்டி முடிக்க. முகில்களின் நிறபேதம் கூறியவாறு.

31. சாதக வினங்கள் தாகமுற் றலந்து
தண்டுளி யிரந்திடத் தாங்கொ
ணாதக மஞ்சூன் மலிதரு பாரத்தா
லம்பரத் தடியுறக் கவிந்தே
மேதக விதங்கொள் தாரைகள் கானு
மிடலுடை முகிலினஞ் செவிக்குச்
சாதக மாமென் னிழுமொலி கெழுமத்
தாரைகொண் டேகுமெல் லெனவே.

32. பொருந்துரு மேற்றுப் பேர்முர சதிரப்
புகுதரு மின்னுநாண் பூட்டிப்
புரந்தரன் சாபம் பொலிதரத் தாங்கிப்
பொருக்கென வீழ்தரு தாரைத்
திருந்துருப் பகழி சேர்தரத் துரந்து
சேணகல் காதலர் சிந்தை
வருந்துறும் வண்ணம் வாட்டுவ கொண்மூ
வரிசிலை மறவரே மான.

---

31. சாதகம் — வானத்தினின்று விழும் மழைத் துளியைப் பருகி வாழும் ஒருவகைப் பறவை; இது நிலத்திலுள்ள நீரைக் குடியாது, ஆகாயத்திலேயே பெரும்பாலும் சஞ்சரிக்கு மென்பது கவிகளின் கொள்கை. தாங்கொணாத — தாங்க ஒண்ணாத, தாங்க முடியாத; கமம் சூல் மலிதரு பாரத்தால் — நிறைந்த மழைக்கருவினது மிகுந்த பாரத்தால்; அம்பரத்து — ஆகாயத்தில்; அம்பரம் — ஆகாயம்; அடியுற — கீழ் நோக்கி; கவிந்து — வளைந்து, படிந்து; கால்கொண்டிறங்கி யென்றபடி. மேதக — மேன்மை பொருந்த; மிடல் — வலிமை; சாதகம் ஆம் — இனிமையான; இழும் ஒலி — இழுமென்னும் ஓசை; கெழும — பொருந்த, நெருங்க; தாரைகொண்டு — மழையைச் சொரிந்து; முகிலினம் தாரை கொண்டு மெல்லென எகும் என்க. இவை யிரண்டு செய்யுளும் தன்மை நவிற்சி.

32. உரும் எறு — பேரிடி; புகுதரு — உண்டாகின்ற; புரந்தரன் சாபம்— இந்திரவில், வானவில்; புரந்தரன் — இந்திரன்; தாரை — மழைத்தாரை; பகழி — அம்பு; துரந்து — செலுத்தி; சேண் அகல் — தூரதேசத்துக்குச் சென்ற; கொண்மூ — மேகம்; சிலை மறவர் — வில் வீரர்; மான — போல; இது உவமை யுருவகம். பொருள் முதலியன காரணமாப் பிரிந்து சென்ற காதலன் கார்காலம் வந்ததுகண்டு தன் காதலியை நினைந்து வருந்துவன் என்பது தாற்பரியம்.

33. வகிருறு வயிடூ ரியமெனப் பசுமை
வயங்கிளம் புல்லினம் வாழைப்
பகிருறு குருத்து விரிந்தபச் சிலையும்
பாங்குறு கோபமு மென்னப்
பகருறு மிவைபோர்த் தொளிர்தரு மவனி
பச்சைமா மரகத முதலாம்
விகிர்தமு றசித வில்லுமிழ் மணிகள்
வேய்ந்தசுந் தரியென மிளிரும்.

34. மஞ்சினம் வழங்கு மனத்தகு மொலிக்கு
வாஞ்சையி னேக்குறு மயிலின்
எஞ்சலி லினங்க ளெழுப்புதங் கலாப
மிலங்குநீ' டெழில்செயத்' தம்முட்
கொஞ்சலு மன்பி னணைதலுங் கூடிக்
குலவலு மலிதாக் குழுமி
நெஞ்சினம் புடனே நீடுற நிருத்தம்
நிகழ்த்துவ களிப்பினி னிவந்தே.

---

33. வகிர் உறு — துண்டு செய்த, பிளவு செய்த; வயிடூரியம் — வைடூரியம் ,(போலி), அது நவரத்தினங்களுள் ஒன்று. வாழைப் பகிர் உறு — வாழையினின்றும் வெளிப்பட்ட; பகிர் — வெளி; பாங்கு உறு — அயலில் விளங்கும், அழகிய எனினுமாம். கோபம் -- இந்திரகோபம், தம்பலப் பூச்சி; செந்நிறமுடைய இது மழைக்காலத்திற் காணப்படுவது; இந்திரனுற் பாதுகாக்கப்படுதலின் இது இந்திரகோபம் எனப்பட்டது. அவனி — பூமி; விகிர்தம் உறு — வெவ்வேருன, வித்தியாசமான (Diverse). அசித — வெண்ணிறமல்லாத ஏனைய; சிதம் — வெண்மை; வில் உமிழ் — ஒளியைக்காலுகின்ற; வேய்ந்த — அணிந்த; சுந்தரி — அழகி. மஞ்சள் கலந்த பச்சையும் நீலமுமான இளம் புல்லும் இலைகளும் செந்நிறப் பூச்சியும் என்னுமிவற்றின் நிறங்கள் செறிந்து விளங்கும் பூமியானது வெண்ணிற மல்லாத ஏனைய பலநிற மணிகள் அணிந்து விளங்கும் ஓரழகிய பெண்ணை நிகர்க்கும் என்பதாம். உவமையணி.

34. மஞ்சு இனம் — மேகக் கூட்டம்; மனத்தகும் — மனதுக்கினிய; எஞ்சல் இல் — குறைவில்லாத; நெஞ்சில் நம்பு உடன் — மனத்தி லாசையோடு; நிவந்து — உயர்ந்து, மேம்பட்டு.

மயிலினங்கள் கலாபம் எழில்செய, மலிதா, குழுமி, நிவந்து, நிருத்தம் நிகழ்த்துவ என்க.

35. மாசுறு நீரால் வளர்ந்தெழு வேகம்
மலிதர வளங்கெழு மிரண்டு
தேசுறு பாலுந் திகழ்தருக் குலங்கள்
சேர்தர வீழ்வகை செய்து
வீசுறு சுழலு மிகையுறப் பொருந்தி
விரிகடல் நோக்கியே விரைந்து
பேசுறு நெறியிற் பிறழ்ந்தமங் கையரிற்
பெயர்குவ நதிக்குல மம்மா.

36. படர்ந்தபுல் லிடங்கள் பல்படப் பொலிந்து
பாசடை நீணிறம் பரப்ப
அடர்ந்தபச் சிளம்பு லங்குர நீட்ட
ஆயிடை யணியுமான் பிணைகள்

---

35. புதிய மழைநீர் பெருகியோடும் நதிகளுக்கு ஒழுக்கமற்ற பெண்கள் உவமானமாகக் காட்டப்படுகின்றனர். இச் செய்யுள் செம்மொழிச் சிலேடை யுவமை. (1) மாசுறு நீரால் — கலங்கற் சலத்தினல், புதுவெள்ளத்தால் என்றபடி; வேகம் மலிதர — ஓடும் வேகம் அதிகப்பட; தேசு உறுஇரண்டு பாலும் — செழித்து விளங்கு மிரண்டு கரைகளிலும்; திகழ் தருக் குலங்கள் — வளர்ந் திருக்கும் மரக் கூட்டங்கள்; சேர்தர வீழ்வகை செய்து — ஒருங்கு பாறி விழும்படி செய்து; வீசுறு சுழலும் மிகையுறப் பொருந்தி — பரம்புகின்ற நீர்ச்சுழியும் அதிகமாக உண்டாகப்பெற்று; விரி கடல் நோக்கியே விரைந்து பெயர்குவ — (செல்லுகின்றன) என நதிகளுக்குப் பொருந்தவும்:

(2) மாசறு நீரால் — குற்றம் பொருந்திய குணத்தால், நிறை யற்ற மனப்போக்கால்; வேகம் மலிதர — காமவேட்கை யதிகப் பட; தேசுறு இரண்டுபாலும் — புகழ் பொருந்திய (பிறந்ததும் புகுந்ததுமாகிய) இரண்டு பக்கத்திலும்; திகழ் தரு குலங்கள் — விளங்குகின்ற தந்தை தாயர் குலத்தையும் கணவனது குலத்தை யும் (இங்கு தருக்குலம் என்பதைச் செய்யுள் விகாரமாக் கொள்க); சேர்தர வீழ்வகை செய்து — ஒருங்கே வசைபெறச் செய்து; வீசுறு சுழலும் மிகையுறப் பொருந்தி — கண்ணைச் சுழற்றிப் பார்வையை வீசுகின்ற குற்றமான செயலுமுடையராகி; விரி கடல் நோக்கி — பல சோர நாயகர்களைத் தேடி விரைந்து பெயர்குவர் என நெறியிற் பிறழ்ந்த மங்கையர்க்குப் பொருந்த வும் பொருள் கொள்க. கடல் — மிகுதி; பேசுறு — விதிக்கப்பட்ட, புகழ்ந்து பேசப்படும்; நெறி — நல்லொழுக்கம்.

தொடர்ந்தமென் புல்லின் துயல்வரு நுனிகள்
துணித்திடச் சூழ்தரு மரங்கள்
மிடைந்தபைந் தளிர்மீக் கான்றிட விந்தம்
விளங்குகா னுளத்தையீர்க் குவவால்.

37. மருண்டசை விழியாம் குவளைபூத் தொளிரு
முகமுடை மான்பிணை யினங்கள்
வெருண்டன வாகி மிடையவெப் பாலும்
விரிமணல் பரந்திடை விளங்கத்
திரண்டதோர் காட்சித் தாகிய கானச்
செழுந்தலஞ் சிந்தையிற் காதல்
புரண்டிடச் செயுமாற் பொற்புற நோக்கும்
புணர்ப்பினர் தங்களுக் கம்மா.

வேறு

38. கனையொலி மலியப் பல்கான்
முழங்குகார் ககனம் போர்ப்பக்
கனவிருள் கவிந்து வைகுங்
காரிர வினிலுங் காதல்
மனமதை வலிப்பச் செல்லு
மங்கையர் சில்லோர் மின்னற்
றுனையொளி தெரிப்ப ஆறு
தொடர்வராற் குறியி டத்தே.

---

36. பாசடை – பசிய இலை; அங்குரம் – முளை; துயல்வரு - அசைகின்ற; துணித்திட – கறிக்க; விந்தம் – விந்தமலை; கான் - காடு; கவி விந்தமலைச் சாரலிலுள்ள காட்டை வருணித்தல் இயற்கையே. அது அவரைப் பரிபாலித்த விக்கிரமாதித்ய மன்னனது அவந்தி தேசத்துள்ளதாகலின் காளிதாச கவியின் அபிமானத்திற் குரியதாயிற்றென்றறிக. மேல்வரும் 55 -, ம் செய்யுளிலும் விந்தமலைக் குறிப்பு வருதல் காண்க.

37. புணர்ப்பு – செயல், தன்மை.

38. கனை ஒலி - மிகுந்த (செறிந்த) ஒலி; ககனம் - ஆகாயம்; போர்ப்ப - மூட, மறைக்க; கன இருள் கவிந்து - நெருங்கிய இருள் படிந்து; வலிப்ப - பெலமாய்த் தூண்ட; துனை ஒளி - விரைவில் தோன்றி மறையும் வெளிச்சம்; ஆறு தெரிப்ப - வழிகாட்ட; தொடர்வர் - தொடர்ந்து செல்வர்; குறி இடத்து - காதலனும் காதலியுங் கூடுதற்குக் குறித்த இடத்துக்கு; இது இரவுக்குறி,

39. அஞ்சுற முழங்கு காரி
னதிர்குர லாலும் மின்னின்
விஞ்சுறு வீச்சி னாலும்
விதிர்ப்புறு மனத்த ராகி
நெஞ்சுறு துனிம றந்து
நிகழ்த்தவர் பிழையு முன்னார்
மஞ்சுறு மணையி னீட
மணாளரை யணைப்பர் மாதர்.

40. காவிநேர் நயன மல்கிக்
காலுநீர்க் கணம டுத்துக்
கோவைநேர் அதர மாட்டக்
கொழுநரை வழியிற் போக்கு
பாவைநேர் இளமின் னார்தம்
பணிமலர் விரைகள் நீத்தே
யாவிநேர் வாரை யுன்னி
யலந்திருந் தேங்கு வாரால்.

41. தொகையுறு கீடம் புல்லுத்
தாழிசேர் வண்ட லாகி
மிகையுறு பாந்த ளென்ன
விலங்குபாய்ந் ததிவி ரைந்தே

---

39. விதிர்ப்பு - நடுக்கம்; துனி - துன்பம், காதலனோடு ஊடலால் வந்த துன்பம்; நிகழ்த்து அவர் பிழையும் - அவர் செய்த பிழையையும், அவர் என்றது மணாளரை. மஞ்சு உறும் அணையில் - கட்டிலிற் பரப்பிய மெத்தையில்; நீட - இறுக; மாதர் மனத்தராகி மறந்து உன்னார் நீட அணைப்பர் என வினை முடிக்க. இது தலைவி தன் அச்சம்வாயிலாக ஊடல் தணிதல்.

40. காவி - நீலோற்பலம்; காலும் - வழிந்தோடும்; நீர்க் கணம் - கண்ணீர்த்துளி; அடுத்து - அணுகி; கோவை - கொவ்வைக்கனி; அதரம் ஆட்ட - இதழை நனைப்ப; இளமின்னார் நயன நீர் அதரம் ஆட்ட, தாம் அணிந்த பணிகளையும் மலர்களையும் வாசனைப் பொடியையும் நீக்கிவிட்டு, உன்னி யலந்து எங்கியிருப்பர் என்க. குலமகளிர் தமது நாயகரில்லாத காலங்களில் தம்மை யலங்கரித்துக்கொள்ளார் என்பதறிக. இது இருத்தல் என்னும் முல்லைத்திணை.

41. இது புதுமழை வெள்ளம் பெருகும் ஆற்று வருணனை. தன்மை நவிற்சி. கீடம் - புழு, பூச்சி முதலியன; வண்டல் - கலங்கல் நீர்; மிகை - நஞ்சு; பாந்தள் - பாம்பு; விலங்கு

வகையுறு தவளை யீட்டம்
மருட்சியி னோக்கி வைக
அகைபுதுப் பெயலா றாகி
யவலுற வோடு மாலோ.

42. சிந்திய கமல நீத்துச்
செவியினுக் கினிய கீதந்
தந்தியல் மதுக ரங்கள்
தணிப்பரு மாவ லாலே
பந்திய வாகி நட்டம்
பயில்மயில் தோகைக் கண்ணுட்
புந்திய தின்றிப் போவ
புதியநீன் மலரிரன் றுன்னி.

43. கதமுறு புதுமே கஞ்செய்
கனைப்பினாற் கிளர்ந்து பொங்கு
மதமுறு தலினாற் பல்கான்
மலிபிளிற் றோசை காட்டுங்
ததமுறு வனக்க ளிற்றின்
தாவிலுற் பலமேர் கன்னம்
விதமுறு வண்ட ரீண்ட
மேவுமாற் கடத்திற் றோய்ந்தே.

---

பாய்ந்து - குறுக்காக (வளைந்து) சென்று; மருட்சி - மயக்கம், கலக்கம்; அகை - எழுந்த, உண்டாகிய; புதுப் பெயல் - முதன் முதலாகப் பெய்யும் மழை; அவல் உற - பள்ளத்தை நோக்கி; அவல் - பள்ளம்; ஆற்று வெள்ளம் குறிஞ்சி நிலத்திற் சென்றமையை வருணிப்பது இச் செய்யுளென்றறிக.

42. சிந்திய - இதழ் சிந்திய, புது வெள்ளத்தால் அழியப் பெற்ற எனினுமாம். கீதம் தந்து இயல் - கீதம்பாடிக்கொண்டு சஞ்சரிக்கின்ற; இயலுதல் - அசைதல், சஞ்சரித்தல்; மதுகரம் - வண்டு; பந்தி - நிரை; நட்டம் பயில் - நிருத்தஞ் செய்கின்ற; புந்தி - புத்தி, விவேகம்; நீல் - நீலம், கருங்குவளைப்பூ; தடாகத்து மலர்கள் அழிவுற்றமையைக் கவி வெகு சமத்காரமாகக் கூறுங் கற்பனை நயம் வியந் தின்புறத்தக்கது. இது மயக்கவணி (பிராந்திமதலங்காரம்).

43. கதம் உறு - தோன்றிய, அடைந்த; ததம் - அகலம், பருமை; தாஇல் - குற்றமில்லாத; உற்பலம் - குவளை மலர்; மேவும் - இருக்கும், விளங்கும்; கடம் - மதம்; தோய்ந்து - நனைந்து. ஓசைகாட்டும் களிற்றின் கன்னம் கடத்திற் றோய்ந்து வண்டரீண்ட மேவும் எனக் கூட்டுக.

44. வெள்ளிதழ்க் கமல மன்ன
வியன்முகில் கல்ல கத்து
வெள்ளிடை புல்லித் துஞ்ச
விரிமலைச் சார லெங்குந்
துள்ளிய லருவி தூங்கத்
தோகைமா மயினின் ருட
அள்ளியன் மலையின் காட்சி
யாசைநோய் விளைப்ப தம்மா.

45. நிரையுறு கடம்பு நீபம்
நீளுறு மருதஞ் சாலம்
விரையுறு தாழை தம்மை
மெல்லென வசைத்து மேவும்
வரையறு வாசம் வாரி
மழைமுகி லாற்கு ளிர்ந்து
விரைவுறு மென்கால் யார்க்கு
விழைதலை விளக்கு றுதால்.

46. கடிகமழ் தருமென் செய்ய
காமர்பூந் தொடையல் வேய்ந்து
கடிதடங் காறு நீண்ட
கவினுறு கூந்த லானும்

---

44. கல்லகம் - மலை; அள்ளு இயல் - மனத்தைக் கவருந் தன்மை பொருந்திய; மழை நீரை முழுதும் சிந்தி வெளுத்த மேகத்துக்கு வெண் தாமரை யுவமானமாயிற்று. புல்லித் துஞ்சல் - தழுவிக் கிடத்தல், காதலன் போல என்பது குறிப்பு. மலையையும் மேகத்தையும் காதலி காதலனாக வருணித்தல் வடமொழிப் புலவர் மரபு.

45. நீபம் - கடப்பமரத்தி லொருவகை, நீர்க்கடம்பு; சாலம். ஆச்சாமரம்; இம் மரங்கள் கார் காலத்துப் பூப்பன என்பதாம்- மேவும் - அவற்றிலுள்ள; வரை - அளவு; வாரி - வாரிக்கொண்டு, தாங்கி; விரைவு உறு - விரைந்து வீசுகின்ற; மென் கால் - மந்த மாருதம்; விழைதல் - ஆசை கொள்ளுதல், (மரங்களை) அசைத்து, வாசம் வாரி, குளிர்ந்து, விரைவுறு கால் என்க. தென்றற் காற்றை வருணிக்கும்போதெல்லாம் அதனிடத்து மந்தம், வாசனை, குளிர்ச்சியாகிய மூன்று குணங்களும் பொருந்தியதாக வருணித்தல் இக் கவியின் மரபென்பதறிக.

46. காமர் - அழகிய; தொடையல் - மாலை; கடிதடம்- அரை; கவின் - அழகு; வடி - மது, வடிக்கப்பட்டது;

வடிகமழ் வதனத் தானு
மாலைதாழ் தனத்தி னானுந்
துடியிடை மடவார் காதற்
றுணைவருக் கின்பு சூழ்வார்.

47. மின்னலின் கொடியும் வான
வில்லுமேர் செய்ய மேவு
கன்னலின் கனம தாலே
கவிதரு முகிலுங் காதில்
மின்னல்செய் குழைகள் காஞ்சி
மணியணி மின்ன னாரும்
மன்னிலிற் பிரிந்து சென்றார்
மனங்கவர் பொருட்க ளாமே.

48. கார்வளர் கூந்த னல்லார்
கடம்புபுன் னாகந் தாழை
யேர்வளர் பூவி யன்ற
விண்டைகள் முடிக்கி சைப்பார்
சாருளை மருதம் பூவாற்
றம்மனப் படிச மைத்த
சீர்வளர் தொங்க லாகுந்
திகழணி காதிற் சேர்ப்பார்.

---

துடி – உடுக்கு; துடியிடை - மெல்லிய இடை; சூழ்வார் - உண்டாக்குவார்.

47. மின்னலின் கொடி - மின்னல் வரிசை, தொடர்; ஏர் செய்ய - அழகு செய்ய; கன்னல் - நீர், மழை நீர்; கவிதரு - படிந்த; காதிற் குழைகளும், காஞ்சியும், மணியும் என உம்மை விரிக்க. இவற்றையணிந்த மின்னனார் என்க. மன்னு இல்லிற் பிரிந்து சென்றார் - (அன்பு) பொருந்திய தம் மனைவியை விட்டுப் பிரிந்து பிறவூர்ச் சென்றவர்கள்; இல் - மனைவி; பிரிந்த காதலர் முகிலையும் மின்னனாரையுங்கண்டு மனத்தில் விரகவேதனை யுற்றனர் என்பது தாற்பரியம்.

48. புன்னாகம் - புன்னை; பூ இயன்ற - பூவினால் தொடுத்த; இண்டை - மாலை; உளை - துய், பூவிதழின் மேலுள்ள மெல்லிய பகுதி; உளை சார் மருதம்பூ என்க. சமைத்த - அமைத்த, உண்டாக்கிய; தொங்கல் - தூங்குகின்ற மாலை, காதணி.

### வேறு

49. காரகிலார் தருசாந்தின்
கலவைதிமி ரங்கமுடன்
நீரகலா மலரணிகள்
நேர்ந்தநறுங் கூந்தனல்லார்
காரகலா துறைகாரின்
கனையொலிமா லையிற்கேளா
நாரகலாக் குரவரிடத்
தகன்றுபள்ளி நணுகுவரால்.

50. கருங்குவளை மலர்நிகர்த்துக்
ககன்மிசை யுறக்கவிந்து
பொருங்குலிசத் தவன்சாபம்
பொருந்திமென்கால் புகவசைந்தே
வருங்குலக்கொண் மூபிரிந்து
வழிச்சென்றோர் தமக்குருகும்
நெருங்குவளைக் கைமடவார்
நெஞ்சமழி தரச்செயுமால்.

---

49. காரகில் - கரிய அகில் வாசனைத்திரவியம்; ஆர்தரு - கலந்த; சாந்தின் கலவை - பரிமளகந்தம்; சாந்து - சந்தனம்; திமிர்தல் - பூசுதல்; நீர் அகலா மலர் - குளிர்ச்சி நீங்காத புதிய மலர்; அணி - மாலை; மலரணி நேர்ந்த நறுங் கூந்தல் - மலர் மாலையால் உண்டாகிய வாசனைபொருந்திய கூந்தல்; காரகலா துறைகார் - கார்காலத்து நீங்காதிருக்கும் மேகம்; மாலை - மாலைக் காலம்; கேளா - கேட்டு; நார் அகலா - அன்பு பொருந்திய; குரவர் - பெரியோர், தந்தை தாய் அண்ணன் முதலியோர்; இடத்து அகன்று - இடத்தினின்று, அறையினின்று, நீங்கி; பள்ளி - பள்ளியறை.

50. ககனம் மிசை - ஆகாயத்தில் உயரமாக; கவிந்து - நீர்க் கனத்தால் வளைந்து; குலிசத்தவன்சாபம் - இந்திரவில்; குலிசத் தவன் - இந்திரன்; மென்கால்புக - மெல்லிய காற்று வந்துபட; குலம்கொண்மூ - கூட்டமாகிய முகில்; இது தலைமகன் தான் மீண்டு வருதற்குக் குறித்துப் போகிய கார்ப் பருவம் வந்தும் தலைமகன் வாராமைகண்டு தலைமகள் மனங் கலங்குதல்.

51. தலைப்பெயரு பந்தணிப்பத்
தழைத்துமிளிர் வனப்பாங்கர்
தலைப்படுமா மகிழ்பொடித்த
தெனக்கடம்பு தார்விரிக்கும்
நிலைப்படுபு நடித்தென்ன
நீண்மரங்கா லுறவசையும்
புலப்படுபுன் னகையென்னப்
பொதியவிழ்க்கு மடற்றாழை.

52. விரிவகுள நாண்மலர்த்தார்
விரைகமழ்மல் லிகையோடு
சுரிகுழன்மங் கையர்முடியிற்
சூட்டிமுல்லை யரும்பட்டிப்
பிரியமுறு காதலனிற்
பெய்வளையார் செவிக்கணியா
அரியபுதுப் பூங்கடம்பு
மளிக்குமிக்கார் பொலிகாலம்.

---

51. கவி இச் செய்யுளில், வனப் பகுதி பெரு மகிழ்வெய்தி யுடல் புளகங் கொண்டதாகவும் நடித்ததாகவும் புன்னகை பூத்த தாகவும் அவற்றை யுருவகம் செய்கின்றார். தலைப்பெயல் - முதன் முதற் பெய்த மழை; தாபம் - வெப்பம்; பாங்கர் - பகுதி; தலைப்படும் - அடைந்த, கொண்ட; பொடித்தது என - புளகம் அரும்பியது போல; தார் விரிக்கும் - பூக்களைக்கொண்டு விளங்கும்; கடப்பம் பூவிலுள்ள மெல்லிய கேசரங்கள் சிலிர்த்த மயிர்போல விளங்குதலின் இவ் வுருவகத்தின் பொருத்தம் அறிந் தின்புறத் தக்கது. நிலைப்படுபு - நிலையாக நின்று; கால் உற - காற்று வந்து பட (அசைப்ப); புலப்படு - தோன்றுகின்ற, வெளிப்படுகின்ற; பொதியவிழ்க்கும் - மடல் விரியும்; தற்குறிப்பேற்றம்.

52. வகுளம் - மகிழமரம்; நாள் மலர் - புதிய மலர்; அட்டி - இட்டு, அணிந்து; பெய்வளையார் - பெண்கள்; அணியா - அணியாக; இந் செய்யுளில் கார் காலம் தன் காதலி அணிவதற்குப் பல் மலர்களும் தேடிக் கொடுக்கும் ஒரு காதலனை உவமிக்கப் பட்டது. இக் காலத்துப் பூப்பனவாகிய மகிழ், மல்லிகை, முல்லை, கடம்பு என்னும் மலர்களைப் பெண்கள் அணிந்து மகிழ்ந்தார்க ளென்பது தாற்பரியம்.

53. கிளர்ந்துநிமிர் தனக்குவட்டிற்
கேழுறுமுத் தின்வடமும்
வளர்ந்துபொலி கடிதடத்தில்
மாசகல்மென் பூந்துகிலும்
குளிர்ந்துபுது நீர்படலிற்
கூச்செறிரோ மத்தொழுங்கு
மிளிர்ந்துவரி யுறுமிடையில்
தாங்குவரான் மின்னனையார்.

54. புதுப்பெயற்றண் டுளிபடிந்து
பொருந்துதண்மை வாய்ந்துபுது
மதுப்பெய்மல ரின்கனத்தால்
வணங்குமர னிடைப்பயின்றே
விதுப்பொடுநெட் டிலைத்தாழை
வெண்பொடிபா டியமென்கால்
வெதுப்புபிரி வுற்றோர்த
மேவுளங்கொள் னேகொளுமால்.

55. கனத்துவளை தருகார்நீர்க்
கனமுறுங்கால் யாநேய
மனத்தொடுசென் றிங்கன்றே
வைகுவதென் றுன்னியபோல்

---

53. கேழ் - ஒளி, நிறம்; கூச்செறி புளகித்த, சிலிர்த்த; ஒழுங்கு - வரிசை; வரி - வலி, மடிப்பு; நல்லிலக்கணம் அமைந்த மகளிர் வயிற்றில் மூன்று வரிகள் (மடிப்பு) மிளிருமென்பது வட நூன் மரபு. புது நீர் படலிற் குளிர்ந்து கூச்செறி ரோமம் என்க. மின்னனையார் தனக் குவட்டில் வடமும், கடிதடத்தில் துகிலும், இடையில் ரோமத்தொழுங்கும் தாங்குவர் எனக் கூட்டி முடிக்க.

54. வணங்கும் - வளைகின்ற; மரன் - மரம்; பயின்று - மெல்லெலன வீசி, உலாவி; விதுப்பு - ஆசை; வெதுப்பு - இதயத்தை வேகச் செய்கின்ற; மேவு உளம் - விரும்புகின்ற, நேசம் பொருந்திய உள்ளத்தை.

55. விந்த மலையில் மேகங்கள் மழை சொரிதலை விந்தமலை செய்த நன்றியை மனத்திலுன்னி மேகங்கள் அதற்குக் கைம்மாறு செய்வதாகக் கவி வருணிக்கின்றார்.

கனத்து வளைதரு. கார் - நீர்க்கனத்தாற் கவிந்த மேகங்கள்; இங்கு அன்றே - உயர்ந்த இம்மலையில் அல்லவோ; சிகை -

சினத்துடனுற் றெழுவேனிற்
தீயின்கொடுஞ் சிகையாலிந்
தனத்துவெந்த விந்தமதைத்
தண்புனலாட் டுபுகுளிர்க்கும்.

வேறு

56\. விழைதருபல் குணம்வாய்ந்து மெல்லியலார்
மனக்குவகை விளைப்ப தாகித்
தழைதருதா வரமவைக்குத் தவறாத
பெருங்கிழமை தாங்கி ஞாலத்
திழைதருபல் லுயிர்க்குமுற வியைந்தவொரு
சீவனமா யிலங்கி மாறா
மழைதருமிக் காலமுன்றன் மனத்துவிழை
நன்கெவையும் வழங்க மாதோ.

இரண்டாம் சருக்கம்
கார்ப் பருவ வருணனை முற்றிற்று.

---

கொழுந்து, சுவாலை; இந்தனத்து வெந்த - இந்தனத்தைப்போல வெந்த; இந்தனம் - விறகு; ஆட்டுபு - ஆட்டி, முழுக்காட்டி; குளிர்க்கும் - குளிரச்செய்யும், மகிழ்விக்கு மென்பதாம். கார் (ஆனவை) என்று உன்னியபோல் விந்தமதை புனலாட்டுபு குளிர்க்கும் என முடிக்க. தற்குறிப்பேற்ற வணி.

56\. சருக்க முடிவிற் காதலிக்கு வாழ்த்துக் கூறுவது இச் செய்யுள். தாவரம் - மரம் செடி கொடிகள்; கிழமை - உரிமை, உறவு; ஞாலத்து - பூமியில்; இழைதரு - இழைந்த, செறிந் திருக்கின்ற; சீவனம் - சீவாதாரம்; மாறா - மாறாத, பொய்யாத; பருவம் பொய்யாத என்றபடி.

# மூன்றும் சருக்கம்

## கூதிர்ப் பருவ வருணனை

57. காசைப்பூக் கலிங்கஞ் சாத்திக்
கமலமென் வதனந் தாங்கி
யாசைமிக் கரற்று மன்னத்
தரவமென் சிலம்ப ணீஇய
மீசையின் முதிர்செஞ் சாலி
யாங்கவின் மேனி மின்னத்
தேசுகொள் மணப்பெண் ணென்னச்
சேர்ந்தது கூதிர்க் காலம்.

58. நீணிலங் காஞ்ச யானு
நிசிகுளிர் மதியி னாலும்
மாணதி யன்னத் தாலும்
வாவிகள் குமுதத் தாலும்
ஏணுறு கானின் பாங்க
ரேழிலைம் பாலை யாலும்
பூணுமல் லிகையாற் காவும்
பொலிந்துவெண் ணிறமே பூக்கும்.

---

57. இச்செய்யுளில் கூதிர்ப் பருவம் ஒரு மணப்பெண்ணாக உவமிக்கப்படுகின்றது. இது செம்மொழிச் சிலேடை யுவமை. (1) காசைப்பூவாகிய ஆடையணிந்து, தாமரை மலரை முகமாகக் கொண்டு, அன்னத்தின் ஒலியாகிய சிலம்பு அழகுசெய்ய, செந்நெல்லாகிய மேனி மின்னக் கூதிர் சேர்ந்தது எனக் கூதிருக்கும்; (2) காசைப்பூப்போன்ற வெண்பட்டுடை யணிந்து கமலம்போன்ற முகமுடையளாய், அன்னத்தின் ஒலிபோன்ற ஒலியையுடைய சிலம்பு அழகுசெய்ய, செஞ்சாலிபோன்ற பைம்பொன்னிற மேனி விளங்க என மணப்பெண்ணுக்கும் பொருந்த உரைத்துப் பொருள்கொள்க.

காசை – நாணல்; கலிங்கம் – ஆடை; அரவம் – ஒலி; அணீஇய – அழகுசெய்ய, அணிசெய்ய; மீசை – மேற்பாகம், கதிரின் நுனிப்பாகம்; தேசு – அழகு.

58. மாண் நதி அன்னத்தாலும் எனப் பிரிக்க. குமுதம் – ஆம்பல்; ஏழிலைம்பாலை இப்பருவத்துப் பூக்கும் ஒரு மரம். கா –

59. கயலினம் பிறழ்வ மின்னு
காஞ்சிய தாகத் தீரத்
தயலின மடைய வைகும்
அனநிரை யார மாக
வியலிரு தடமு மேன்மை
விரிகடி யாம தர்ப்பின்
மயலிள மடந்தை மான
மந்தமுற் றியங்கும் யாறே.

60. தாமரை வளையம் வெள்ளி
சங்கென வெளுத்து முற்றத்
தேமரு வுதகஞ் சிந்திச்
சிதறினூ ருங்கக் காற்றுற்
காமரு செலவிற் றூகிக்
காரின மசைய வானஞ்
சாமரை யிரட்ட வைகுந்
தரணிபற் பொருவு மோர்பால்.

---

சோலை. ஏழிலைம்பாலைப்பூ யானைமத நாற்றமுடையது; அதனால் அது யானைக்குப் பகைமரமாகும் என்பது,

“ பூத்தவேழிலைம் பாலையைப் பொடிப்பொடி யாகக்
காத்தி ரங்களாற் றலத்தொடுந் தேய்த்ததோர் களிறு.”
—(கம்பராமா. பா. வரை. 6)

59. புது வெள்ளத்தின் வேகம் தணிய யாறு சமநிலத்தில் மெதுவாக ஓடுங் காட்சியைக் கவி சுவைபட வருணிக்கிறார். தன்னழகும் இளமையுங் குறித்துத் தருக்குற்று, தளர்நடைபோட்டுக் கொஞ்சிக் குழைந்துவரும் இள நங்கை யொருத்தியைப்போல, புது வெள்ளம் குமிழியிட்டுப் பெருகிச் சுழித்து நெளிந்து மெதுவாக அசைந்து செல்லும் எனச் செய்யுளில்வரும் உவமைநயங் கண்டின்புறத் தக்கது.

காஞ்சி – மேகலை; தீரம் – கரை; ஆரம் – மாலை, முத்துமாலை; வியல் – அகன்ற, விசாலமான; தடம் – கரையையடுத்த உயர்ந்த நிலம்; கடியா – கடிஆக; கடி – அரை; மதர்ப்பு – மனக் களிப்பு, இளமையு மழகும்பற்றி வரும் தருக்கு. இது உவமையுருவக அணி.

60. ஓர்பால் வானம் சாமரையிரட்ட வைகுந் தரணிபற் பொருவும், எனக் கூட்டுக. சிதைந்த சிறு வெள்ளை மேகங்கள் காற்றினால் அசைந்து செல்லுதல் வெண்சாமரை வீசுவதுபோல இருக்கிறது.

தேம் – இனிமை; இரட்ட – வீச; தரணிபன் – அரசன்; பொருவும் – ஒக்கும்.

61. பொடியுறு மையின் வண்ணம்
பொருந்துமம் பரமுஞ் செய்ய
கடியுறு திலகம் பூத்துக்
கதித்தசெம் புவியும் முற்றி
யடியுற விளைசெஞ் சாலி
யகன்பணைப் புறமு மிந்தப்
படியுறு காளை யர்க்கு
ளெவர்க்குமால் பயவா மன்றோ.

62. வீசுமந் தாநி லத்தா
லசைவியன் கொம்பர் தாங்கி
வாசமென் மலர்க்கொத் தாற்கோ
மளந்திகழ் கிளைகண் மல்கி
யாசையிற் களிவண் டீட்ட
மருந்துசெந் தேனி றைக்குந்
தேசுறு குரவம் யார்தஞ்
சிந்தையை யீரா தன்றே.

---

61. வண்ணம் — நிறம்; அம்பரம் — ஆகாயம்; செய்ய — சிவந்த; கடி — வாசனை; திலகம் — உச்சித்திலகம் (என்னும் மரம்; இச்சொல் தலைக்குறை), கதித்த — மிகுந்த; செம்மை மிகுந்த புவியும் என்க. பணை — வயல்; படி — பூமி.

இச் செய்யுளில் இப் பருவம் செய்யும் சில விசித்திர வர்ண ஜாலங்கள் காணலாம். மேலே கருநீல வானமும், கீழே உச்சித் திலகச் செம்மலர் பூத்துப் பொலிதலாற் செந்நிறந் தோய்ந்து விளங்கும் நிலப்புறமும், அயலில் பொன்னிறம் பூத்துப் பொலியும் நெல் வயற்புறமுமாகிய இக் காட்சியில் ஒரு தனிக் கவர்ச்சியிருந்து காண்பவரை மயக்கும் என்பது கருத்து. மேலும், இளங்காதலனுக்குத் தன் காதலியின் கூந்தலையும் செவ்விதழையும் பைம்பொன்மேனிப் பொலிவையும் ஞாபகப்படுத்திக் காதலுணர்ச்சியைத் தூண்டு மென்பதுமாம்.

62. மந்தா நிலம் (மந்த அநிலம்) - இளங்காற்று; கோமளம் - மிருதுத்தன்மை; குரவம் - குராமரம்; ஈராது - பிளவாது, வருத்தாதென்றபடி. புதுப்புனலில் தவழ்ந்துவருங் காற்றிலே ஒரு குளுமை; புது வெள்ளம்கண்டதுமே சுற்றுப்புறம் நகைபூத்து மகிழ்கின்றது; காய்ந்து வரண்டுநின்ற மரம் தளிர்த்துப் பூத்துச் சிலிர்க்கின்றது. இக்காட்சியை யனுபவிப்பதில் உளதாகும் தனியான ஒரு இன்ப வெறி மனத்திற் புகுந்து உணர்ச்சியை யெழுப்பி விடும் என்பதாம்.

63. தாரகைக் கணமென் சந்த
வணிகலன் தாங்கி மேகப்
பாரக மறைப்பு நீக்கிப்
பனிமதி வதனங் காட்டி
யேரகை தரவே தூய
வெழினிலாப் பட்டு டுத்துச்
சீரகை யிளமின் னாளிற்
றினந்தினம் வளருங் கங்குல்.

64. மன்னுநீர்க் காக்கை மூக்கால்
வருதிரை நிரைவி லக்கத்
துன்னுசா ரசநீ ரன்னத்
தொழுதியீர் பாலுஞ் சூழ
மின்னுபங் கேரு கப்பூந்
தாதினாற் செம்மை மேவி
யன்னமெங் கணுஞ்சி லம்ப
அகலும்யா றினிமை பூக்கும்.

---

63. தாரகை - நட்சத்திரம்; சந்தம் - அழகு; பாரகம் - திரை; அகைதல் - தோற்றுதல், உயர்தல்; கங்குல் - இரவு. ஐப்பசி—கார்த்திகை மாதங்களாதலின் இராமானம் வரவரக்கூடும். நாளுக்குநாள் இரவு வளர்ச்சியடைதல், அழகிய இளம்பெண் ஒருத்தி நாளொரு மேனியாக வளர்ச்சியடைவதை யொக்கும் என்பது இச் செய்யுளில் வரும் வருணனை. செம்மொழிச் சிலேடை உவமையணி. (1) நட்சத்திரக் கூட்டமாகிய அழகிய ஆபரணங்களைத் தாங்கி மேகமாகிய திரையின் மறைப்பை நீக்கிச் சந்திரனாகிய முகத்தைக் காட்டி அழகு தோன்றும்படி நிலாவாகிய பட்டாடை யுடுத்து வளரும் எனக் கங்குலுக்குப் பொருந்தவும், (2) நட்சத்திரக் கூட்டம்போல மின்னுகின்ற அழகிய ஆபரணங்களை யணிந்து மேகத்தை நிகர்த்த திரையின் (முக்காட்டின்) மறைப்பை நீக்கி மதிபோன்ற வதனத்தைக்காட்டி நிலாவைப் போன்ற வெண்பட்டாடை யுடுத்து வளரும் என இளமின்னாளுக்குப் பொருந்தவும் உரைத்துப் பொருள் கொள்க.

64. வருகின்ற திரையின் நேர்வரி, நீர்க்காகம் மீனைப் பிடிப்பதற்கு மூக்கை நீருட் புகுத்துவதால், நடுவில் இரண்டாகப் பிரிகிறது என்பதாம். ஈர்பாலும் - இரண்டு கரையிலும்; பங்கேருகம் - தாமரை; சிலம்ப - ஒலிக்க.

65. கண்ணிறை யணியாய்த் தண்ணென்
    கதிரினான் மனங் கவர்ந்தே
யுண்ணிறை மகிழ்ச்சி யோங்க
    ஒண்டுளிப் பனிநீர் சிந்தும்
விண்ணிறை மதியங் காந்தர்ப்
    பிரிந்தவெவ் விடந்தோ யம்பாற்
புண்ணிறை தருமின் னார்தம்
    புரங்களைப் பொடிக்கு மூங்கு.

66. முதிர்தரு கதிர்க்க னத்தால்
    முன்வளை சாலி யீட்டம்
விதிர்தரச் செய்து பூவின்
    மிகுபரத் திறைஞ்சு தாரு
குதிதர வாட்டிக் கொங்கு
    குலவுதா மரைத்த டங்க
ளதிர்தர வசைக்கு மென்கா
    லசைக்குமா விளையோ ருள்ளம்.

67. காமுறு மிதுன வன்னக்
    கணமவை கவின்வி ளைப்பத்
தேமுறு கமலங் காவி
    திகழ்ந்தணி செயத்தெ விந்தே
ஆமுறு புலரி மென்கா
    லசைத்தலை நிரையெ ழுப்ப
எமுறுத் துவவால் வாவி
    யிதயத்தை யெவர்க்கு மாதோ.

---

65. காந்தர் - கணவர், பிரிவாகிய விடந்தோய்ந்த அம்பு என்க. புரம் - உடல்; பொடிக்கும் - சுடும், எரியச்செய்யும்; ஊங்கு - மிகவும்.

66. இறைஞ்சு தாரு - வளைகின்ற மரம்; குதிதர - குதி கொள்ள; கொங்கு - பூந்தாது, வாசனை; மென்கால் - தென்றல், இங்கும் காற்றின் மூன்று தன்மைகளும் (மென்மை, வாசனை. குளிர்ச்சி) குறிப்பிடப்படுதல் காண்க. (45-ம் செய்யுளுரை பார்க்க),

67. புலரிக்காலையில் வாவிகள் அளிக்கும் காட்சியை வருணிப்பது இச் செய்யுள். காமுறு - ஆசைபொருந்திய; மிதுன அன்னம் - ஆண்பெண் அன்னங்கள், அன்னத் தம்பதிகள்; தேம் - தேன், வாசனையுமாம்; ஆம் உறு - குளிர்ச்சி பொருந்திய; புலரி - விடியற்காலம்; எம் உறுத்துவ - களிப்புறச் செய்வன, மயக்குவன.

68. வானவில் மேகந் தன்னுள்
மறையுமால் வான்ப தாகை
யானவில் மின்னுத் தோன்ற
லருகுமான் மற்றிந் நாளிலு;
பானவில் சிறையாற் கொக்கம்
பரத்தினை யசைத்த லின்றால்
ஆனவில் மஞ்ஞை யண்ணாந்
தகல்விசும் பினைநோக் காவால்.

69. ஆடல்விட் டொழிந்த மஞ்ஞை
யணியைவிட் டநங்க னின்பு
நீடல்செய் மதுர அன
நிகழ்த்தன நிரையைச் சாரும்
வாடல்செய் கடம்பு நீபம்
மருதுமல் லிகைசால் நீங்கி
யேடவிழ் மலர்ப்பூஞ் செவ்வி
யேழிலம் பாலை மேவும்.

வேறு

70. கரிய நொச்சி மலரின் கந்தம் பரவிப் பொலியப்
புரியு மகிழ்வின் வைகு புள்ளின் னொலிமிக் கதிரத்
திரியு நவ்வி விழியா நீல மெங்குந் திகழ
விரியுங் கானப் பொங்கர் மிகுமால் மைந்தர்க் கூட்டும்.

---

68. கார்ப் பருவக் காட்சிகள் மறைந்தமையைக் கூறுவது இச் செய்யுள். பானவில் - (பால் நவில்) - பாலென்று சொல்லப்படும், பால்போன்ற என்பதாம். ஆனவில் - (ஆல் நவில்) - ஆலுதலைச் செய்கின்ற; ஆலுதல் - மயிலின் ஓசை.

69. கார்ப் பருவத்தில் இன்பக் காட்சிக்கு இடமாயிருந்தவை மறைய அவ்விடத்துக்கு இப்போது வந்து காட்சியளிப்பன இவை யென வருணிப்பது இச் செய்யுள். சால் - சாலமரம்; அநங்கன் மஞ்ஞை யணியைவிட்டு அன்னங்களின் நிரையைச் சாரும் (அடைவான்) என்க. ஏடு - இதழ்; மலர்ப்பூஞ் செவ்வி - மலர்களின் பொலிந்த அழகு, மலர்ப்பூஞ் செவ்வி கடம்பு நீபம்........ சால் நீங்கி எழிலம்பாலையை மேவும் என்க. கடம்பு முதலியன இப் பருவத்திற் பூப்பதில்லை யென்பது குறிப்பு.

70. நவ்வி - பெண்மான்; திரியும் விழி - மருண்டசையும் கண்; விழியாம் நீலம் - நவ்வி விழியாகிய கருங்குவளைப் பூ; இரண்டும் மகளிர்கண்ணுக்குவமையாவன. பொங்கர்-சூழல், சோலை.

71. கானார் செய்த லல்லி கமல நிரைக ளாட்டித்
தேனார் மலரின் தண்மை சிவணித் தருமல் லிலையின்
வானார் நுனியிற் றூங்கி வயங்கு பனிநீர் மாற்றும்
நோனார் புலரி மென்கால் நுகரா சையினை மூட்டும்.

72. விளைநெற் குலைகள் மேவி மிளிரச் செறுவின் பாங்கர்
வளைவுற் றுனின் நிரைகள் மறுக்க மின்றி மன்னக்
கிளைகொள் நாரை யன்னங் கிளத்து மொலியேற் றெதிரக்
களைகொள் பண்ணை யீட்டங் காண்போர்க் கின்பங் காட்டும்.

73. மின்னார் தம்மென் னடையை விஞ்சி யன்னம் வெல்லும்
அன்னார் மதிமு கத்தை யலர்தா மரைவீ வெல்லும்
உன்னார் கண்ணி னோக்கை யுற்ப லங்கள் வெல்லும்
பொன்னார் புருவ லீலை புன்னீ ரலையே வெல்லும்.

74. மிளிரும் பூண்கள் தாங்கு மின்னார் தோளின் பொலிவைத்
துளிரும் மலருந் தாங்கித் துயலும் வஞ்சி கவரும்
ஒளிரும் முறுவ லொளியா லுயர்மென் மூரற் காந்தி
குளிரும் வெண்பூக் குலவு மிருவாட் சியினாற் குன்றும்.

---

71. கான் - வாசனை; சிவணி - பொருந்தி; நோனார் - வலிமை பொருந்திய; நுகராசை - அனுபவிக்கும் அவா. ஆட்டிச்சிவணி நோனார் மென்கால் ஆசையினை மூட்டும் என்க.

72. செறு - வயல்; வளைவுற்று - சூழ்ந்து; மறுக்கம் - இடர், மனக்குழப்பம்; கிளத்தும் - கத்தும்; எற்றெதிர - எதிரொலி செய்ய; களை - அழகு; பண்ணை - வயல். இது மருதநிலக் காட்சி வருணனை.

73. இச் செய்யுளில் இயற்கைப் பொருட்கள் அழகிலும் பொலிவிலும் பெண்களை விஞ்சியிருப்பதாக வருணிக்கப்படுகின்றன. அடுத்த செய்யிளிலு மப்படியே. வீ - மலர்; உன்னார் - உன்னம் ஆர்; உன்னம் - உள்ளக் குறிப்பு, மனக்குறிப்பு; பொன் - அழகு; லீலை – ஆட்டம், காமக்குறிப்பான அசைவுகள்; புன் - சிறிய.

74. வஞ்சி - (படர்) கொடி, மாதர் தோளுக்குக் கொடியை யுவமானங் கூறுவது வடநூன் மரபு. முறுவல் - பல்; மென் மூரல் - புன்னகை, வெள்ளிய பல்லின் ஒளி சேருவதாற் சோபை யுறும் புன்னகையின் காந்தி என்க. இருவாட்சி - முல்லையினத் தைச் சேர்ந்த ஒருவகைக் கொடி; குன்றும் - குறைவடையும்.

75\. கொண்ட லன்ன நெளிபைங் கூந்த னிறைய மாதர்
வண்டு செறிமல் லிகையின் மலர்கண் மாண வட்டி
மண்டு பொன்னி னணிகள் வயங்கு காதில் வாசங்
கொண்ட விவித மலருங் கூசா தணிவ ரன்றே.

76\. தருக்கு சிந்தை மாதர் தனமேற் சாந்தச் சேறும்
நெருக்கு முத்தின் வடமு நேர்வர் பரிய வரையில்
விரிக்குங் காஞ்சிக் கோவை மிளிர விரிமென் கமல
அரக்கு மலர்நே ரடியி லஞ்சி லம்பு மணிவார்.

வேறு

77\. மஞ்சி லாதுமிளிர் மாமதி யோடு
வரிசை சேருடு மலிந்தகல் வானம்
விஞ்சி யெங்குமலர் வெண்குமு தத்தண்
விரிம லர்க்குவியல் மேவுற நாப்பண்
மஞ்சி லங்குமர சக்குல வன்னம்
மன்ன மாமரக தத்தொளி வாய்ந்த
எஞ்ச லில்சலில மெய்தியி லங்கும்
ஏரி யென்னவெழி லேய்ந்து விளங்கும்.

---

75\. கொண்டல் - மேகம்; நெளி - நெளிந்த, சுரிபொருந்திய; மாண - நிறைய; அட்டி - அணிந்து; விவித - பலவினமான.

76\. தருக்கு - களிப்படைந்த; சாந்தச் சேறு - கலவைச் சந்தனம்; நேர்வர் - அணிவர்; கமல அரக்கு மலர் - செந்தாமரைப்பூ; அரக்கு - சிவப்பு. இவை இக் கூதிர்ப் பருவத்திற்கேற்பப் பெண்கள் செய்யும் அலங்காரங்களென் றறிக.

77\. மஞ்சு இலாது அகல் வானம் எனக் கூட்டுக. மஞ்சு — மேகம்; உடு — நட்சத்திரம், அகல் வானம் ஏரி யென்ன விளங்கும் என வாக்கியம் முடிக்க. மஞ்சு இலங்கும் — அழகு விளங்கும்; எஞ்சல் — குறைதல்; சலிலம் — நீர்; ஏய்ந்து — பொருந்தி. இது சரற்காலத்து இரவில் வானம் அளிக்குங் காட்சியை வருணிப்பது. நட்சத்திரக் கூட்டங்களும் நடுவில் சந்திரனும் விளங்கும் நீல வானம் ஆம்பல் மலர்களும் நடுவில் அரச அன்னமும் பொருந்தி விளங்கும் ஒரு தெளிந்த நீரோடையை ஒக்கும் என உவமை கூறப்பட்டது.

78. கொங்கு லாமல ரளைந்து குலாவிக்
குளிர டைந்துவளி வீசு மிடைந்த
மங்கு லோடிமறை வுற்றிட வெட்டு
மாதி ரங்களு மலர்ந்தொளி மன்னும்
தங்கு வண்டலற நீர்தெளி வெய்துந்
தரணி பங்கமுலர் தந்து வலிக்கும்
பொங்கு வெண்மதி பொலிந்த விசும்பு
பூக்குமால் விவித மீனிரை கூதிர்.

79. செங்க திர்க்கர மெழுப்ப மலர்ந்து
தேசுறுங் கமல மாமலர் யாணர்
அங்க மின்னுமிள நங்கையர் தங்க
ளான னம்மென மிளிர்ந்தழ கெய்துந்
துங்க வெண்மதி முகம்மறை வாகத்
துயர்வ ருங்குமுத மென்மலர் சோர்ந்து
நங்க ளன்பர்பிரி யத்தனி வைகுந்
தைய லார்துனி தரும்நகை மானும்.

---

78. கூதிர்ப் பருவத்து நிகழ்ச்சிகள் சிலவருணிக்கப்படுகின்றன. அவையாவன:– (1) வளி மலரளைந்து குலாவிக் குளிரடைந்து வீசும்; (2) மங்குல் மறைவுற்றிட மாதிரங்கள் ஒளி மலர்ந்து மன்னும்; (3) வண்டல் அற நீர் தெளிவெய்தும்; (4) தரணி பங்கம் உலர்ந்து வலிக்கும்; (5) மதி பொலிந்த விசும்பு விவித மீன் நிரையைப் பூக்கும் என்பனவாம்.

மாதிரம் – திக்கு; வண்டல் – கலங்கல்; பங்கம் – சேறு; மீன் – விண்மீன்; கூதிர் – கூதிர்க்காலத்தில்.

79. இச் செய்யுள் அருணோதய கால வருணனை. விடியற் காலையிற் செந்தாமரை மலர் நாயகரோடு உறையுமிள நங்கையர் முகம்போல மலர்ந்து விளக்கமுறும்; ஆம்பல் மலர் நாயகரைப் பிரிந்த மங்கையர் செய்த சோகச் சிரிப்பை நிகர்த்துப் பொலிவிழந்து தோன்றும் என உவமை நயந் தோன்ற வருணித்திருப்பது நோக்கியின்புறத்தக்கது. செங்கதிர் – சூரியன்; கரம் – கிரணம்; "செங்கதிர்க் கரமெழுப்ப மலர்ந்து தேசுறு" என்னும் அடையை இள நங்கையர்க்குங் கூட்டுக. இங்கு கரம் என்பது நாயகரது கை. மலர்ந்து – கண்விழித்து; தேசுறும் ஆனன மென்க.

80. காத லுற்றவிள நங்கையை நீத்துக்
கடுகி யேவழிசெல் காளைமற் றன்னாள்
பாத ருங்கரு விழிக்கவி னீலோற்
பலம லர்க்கிடை பயின்றிடல் கண்டும்
பீத கத்தியலு மேகலை யோசை
பீடு சால்களி யனத்திடை கேட்டும்
சேத கத்தசர சோபையை யுச்சித்
திலக மேவல்கண் டும்மழு மேங்கி.

81. மாதர் தங்கண்முக மேவுற வானம்
மல்கு மாமதிகொள் செவ்வியை வைத்தும்
மாதர் அன்னமிசை யின்னொலி யன்னார்
மணிகொள் நூபுர மவற்றிடை வைத்தும்
மாதர் செய்யும்த ரத்திடை மன்ன
மாணு றுந்திலக வீநிறம் வைத்தும்
கூதிர் தந்துகுல விப்பொலி மாட்சி
கொள்கை யாலயல்பெ யர்ந்திடு மாதோ.

---

80. தன் காதலியைப் பிரிந்து வழிச்சென்றோன் செல்லுமிடத்துக் கண்ட சில காட்சிகள் தன் காதலியின் நினைவை மனத்திலெழுப்ப அதனால் மனங்கலங்கி யழுகின்றான் என்பது கருத்து. பாதரும் – பரந்த, பா - பரத்தல்; பீதகம் – பொன்; மேகலை யோசை – மேகலையாபரணத்துள்ள சிறுமணிகளினோசை; பீடு – பெருமை; சேதகம் – சிவப்பு; சோபை – அழகு; மேவல் – பொருந்துதல். காளை கண்டும் கேட்டும் கண்டும் ஏங்கி அழும் எனவினை முடிக்க.

81. சரற்காலமானது அடுத்துவரும் முன்பனிக்காலத்துக்கு இடங்கொடுத்துத் தான் மறைந்த பின்னும் தன் காலத்து அழகுகள் முற்றும் மறைந்துபோகாவண்ணம் அவற்றைச் சேமமான இடங்களில் மன்னும்படி வைத்துவிட்டுப் போகின்றது எனக் கவி வெகு சமத்காரமாக வருணிக்கின்றார் இச் செய்யுளில்.

செவ்வி – அழகு; மாதர் அன்னம் – அழகிய அன்னம், அன்னம் இசைக்கின்ற இன்னொலியை யென்க. நூபுரம் – காற்சிலம்பு; மாதர் செய்யும் – மயக்கத்தைச்செய்யும், கண்டோரை மயக்கும்; திலகவீ – உச்சித்திலகப்பூ; கொள்கை – முறை, நியதி.

கூதிர் மாட்சி (யானது) மதிச் செவ்வியை முகம் மேவுற வைத்தும், இன்னொலியை நூபுரத்திடை வைத்தும், வீ நிறத்தை அதரத்திடை வைத்தும் பெயர்ந்திடு மென்க.

வேறு

82. தேமுற விரிசெங் தாமரை முகமுந்
திகழுநீ லோற்பல விழியும்
காமுற விரிவெண் காசைப்பூம் பட்டுங்
கவினுறத் தாங்குபு கண்டோர்
ஏமுறு குமுத காந்தியு மேவி
யிளமையி னலம்பொலி மாதர்
தாமுறு மதர்வை காட்டுமிக் கூதிர்
தருகநும் மனத்ததி மகிழ்வே.

மூன்றாஞ் சருக்கம்
கூதிர்ப் பருவ வருணனை முற்றிற்று.

---

82. இச் சருக்கத்து முதற் செய்யுளிற்போல இங்கும் கூதிர்ப் பருவத்தைக் காமஞ்சாலிள நங்கையாக உவமிக்கின்றார் கவி. செம்மொழிச்சிலேடை யுவமையாகப் பொருள் கொள்க. சருக்கமுடிவிற் காதலிக்குக் கூறும் வாழ்த்து இச் செய்யுளென்றறிக.

தாங்குபு — தாங்கி; கண்டோர் ஏமுறு — கண்டவர் மயங்குகின்ற; மதர்வை — மதர்ப்பு. கூதிர் நும் மனத்து அதி மகிழ்வு தருக எனக்கூட்டுக.

## நாலாம் சருக்கம்

### முன்பனிப் பருவ வருணனை

83. புதிய இலையும் பைங்கூழும்
பொலிய வெள்ளி லோத்திரம்பூத்
துதைய முதிர்ந்து செஞ்சாலி
தோன்றக் கமலம் பொலிவழிய
ததிய தாமென் பனியெங்குந்
தயங்கி வெண்மை தரவீழும்
விதிய தாமுன் பனிக்கால
மேவிற் றுகு மெல்லியலே.

84. குவிந்து கோல நீடுதனக்
கொம்ப ரனரிக் குளிர்காலை
யவிர்ந்து சேந்த குங்குமத்தி
னளவ லாற்செங் கேழடுத்துக்
கவிந்து முல்லை மதிதுகினங்
காட்டு நிறத்த கவின்மாலை
தவிர்ந்து தங்கள் தனபரத்திற்
கணிசெய் தாமந் தரிக்கிலரால்.

85. காமஞ் சாலு மிளமின்னார்
கரத்து வளையுங் கவிதோளின்
ஏமஞ் சாலு மங்கதமு
மியைய வணித லின்றுகும்

---

83. பைங்கூழ் — பயிர்; வெள்ளிலோத்திரம் — இக்காலத்தில் பூக்கும். ஒரு மரம்; துதைய — நெருங்க; ததி — பருவம்; ததிய — பருவத்துக்குரிய; விதி — முறை, தன்மை; மெல்லியலே — பெண்ணே! மகடூஉ முன்னிலை.

84. குவிந்து — குவிவுற்று, திரண்டு; குவிந்து நீடு தனம் என்க. அவிர்தல் — விளங்குதல்; சேந்த — சிவந்த; துகினம் — பனி; தவிர்ந்து — நீக்கி; தாமம் — மாலை.

வாமஞ் சாலு மரைய தனில்
வயங்கு பட்டும் மலிதலிலை
தாமஞ் சாலுந் தனதடமேல்
தயங்கு மென்பூந் துகிலுமின்றால்.

86. காசும் மணியுங் கலந்தொளிருங்
காஞ்சித் தாமங் கடிதடத்திற்
தேசுங் கவினுந் திகழ்மடவார்
சேர வணிதல் செய்கிலரால்
பேசும் எகின மிழலைமொழி
பேணு மணிநூ புரமுமொளி
வீசுங் கமல மலரடியின்
மேவப் புனையும் விருப்பிலரால்.

87. அங்க மலியக் கருஞ்சாந்தை
யணங்க ளூர்மிக் கணிவரெழில்
தங்கு கமல முகந்தனின்மான்
மதத்தி னிலைக்கோ லஞ்சமைப்பார்
பொங்கு கருமென் கூந்தனறை
பொலிய வகிலம் புகையார்ந்து
துங்க முறநன் கூட்டுவராற்
சுரத போக சுகம்பெறவே.

---

85. எமம் – பொன்; அங்கதம் – தோளணி; வீமம் – அழகு; மலிதல் இலை – விளங்கித் தோன்றுதலில்லை; தாமம் சாலும் – ஒளிபொருந்திய, மலையை ஒத்த எனினுமாம். வேனிற் காலத்திற் கேற்க மெல்லிய ஆடைகளை முன்பு அணிந்தார்கள் (செய். 7). இப்போது அவற்றை நீக்கிப் பனிக்காலத்துக்கேற்ற வேறு உடைகளைப் பெண்கள் அணிந்தார்களென்பது தாற்பரியம்.

86. காசு – பொன்; காஞ்சித் தாமம் – மேகலை வடம்; எகினம் – அன்னம்; முன்பு அணிந்த இவ் வணிகள் இப் பருவத்துக் கேற்றனவாகாமையின் அவற்றை யணியாது விட்டனரென்பதாம்.

87. மான்மதம் – கஸ்தூரி; இலைக்கோலம் – தொய்யில்; இலை பூ முதலிய உருவமாகக் கோலம் எழுதுதல். இவ்விதம் அலங்கரித்தல் இக்காலத்திலின்று. சமைத்தல் – செய்தல்; சுரதம் – காதல், புணர்ச்சி.

88. துன்னு சுகபோ கானுபவ
நோவாற் சோர்ந்து புலர்ந்தமுக
மின்ன ஞர்தம் செவ்விதழின்
மேவு தந்த விரணத்தாற்
கின்ன முறுவா ருவகைகனி
கிளரு நிமித்தங் கிடைத்தாலும்
சின்ன தாமென் வெறுநகையே
செய்வா போசை செறியாமல்.

89. கதித்து விம்மு கனதனஞ்சால்
கவின்மார் பகம்வே துறத்துமென
மதித்து விருப்பி னவண்புக்கு
வதியுங் காலை மார்பிறுகப்
பதித்து நகிலோ டழுத்துண்டு
படரெய் தியமுன் பனிக்காலம்
உதிர்த்து நீரைப் புன்னுனியா
லழுத போலு முதயத்தே.

90. முதிருஞ் சாலி நிரையெங்கு
மொய்த்து மிளிர வோவாது
விதிரும் நோக்க விழிநவ்வி
மேவிப் பொலிந்து கவின்விளைப்ப
மதுரம் மனத்து மலியவவண்
வாழு மன்றி லெழுப்பொலியால்
அதிரும் பண்ணைப் புறம்யார்க்கு
மளவி லாசை யகத்தூட்டும்.

---

88. புலர்ந்த – வரண்ட; தந்தம் – பல்; விரணம் – புண்; பல்லால் நேர்ந்த புண். கின்னம் – துன்பம்; நிமித்தம் – காரணம்.

89. வேதுறத்தும் என – வெப்பஞ்செய்யும் என்று; அவண் – அங்கு, பெண்கள் மார்பில்; பதித்து – புதையச் செய்து; படர் – துன்பம், தற்குறிப்பேற்றம். இதிலுள்ள கற்பனை நயம் நோக்கி யின்புறத்தக்கது.

90. ஓவாது விதிரும் – ஓயாம லசைகின்ற; நோக்க – பார்வையை யுடைய. சாலி நிரை மிளிர நவ்வி கவின் விளைப்ப அதிரும் பண்ணைப்புறம் ஆசையூட்டுமென்க. இது நெல்வயற்காட்சி வருணனை.

91. நீல மலரே டவிழ்ந்தழகு
நேர்ந்து பொலிய நீள்களியா
லானு மெகினத் தொழுதியவை
யங்கங் கணிசேர்ந் தழகுசெயச்
சாலத் தெளிந்து சவியுற்றுத்
தண்ணென் தகைமை சார்புனலாற்
கோல மருவிக் குலவுதடங்
குமர ருளத்தைக் கொள்ளைகொளும்.

92. பனியின் குளிரால் முதிர்வடைந்து
பழுத்துக் காற்றிற் பயிறந்து
தனியி லுசையு ஞாழலின்னே
தலைவர்ப் பிரிந்து தனிவைகித்
துனிய டைய்து தோகையர்தஞ்
சுவண மேனி பசந்தென்னக்
கனியு மினிய மொழிமடவாய்!
கவினு மழிந்து விளர்ப்புறுமால்.

வேறு

93. பூவி னீடிய புதுமது மணம்பொலி வாயர்
பாவை மார்முக வுயிர்ப்புடல் பரிமளம் பரப்ப
ஆவி யன்னவர் தம்மொடே யங்கமா ரணைப்பில்
மேவு காதலொ டாடவர் விழிதுயில் கொள்வார்.

---

91. இது தடாகக் காட்சி வருணனை. எடு அவிழ்ந்து — இதழ் விரிந்து; சவி — ஒளி. நீல மலராலும் அன்ன நிரையாலும் தெளிந்து விளங்கும் நீரினாலும் தடாகம் காளையர் மனத்தைக் கவர்ந்து காதலுணர்ச்சியை மூட்டுமென்பதாம்.

92. பயிறந்து — பயின்று, காற்றில் நெடுகக் கிடந்து என்றபடி; ஞாழல் — ஒருவகைச் செடி, இது வடமொழியில் பிரியங்கு எனப்படும். சுவணம் — பொன்; பசத்தல் — நிறம் மங்குதல், வெளிறுதல். மடவாய்! மகடூஉ முன்னிலை. கவினும் என்பதில் உம்மை அசை. விளர்த்தல் — வெளிறுதல். தற்குறிப்பேற்ற உவமை.

93. மது மணம்பொலி வாயராகிய பாவைமார் முக உயிர்ப்புத் தம் முடலில் பரிமளம் பரப்ப ஆடவர் துயில்கொள்வாரென்க.

94. புதிய யௌவனம் பொலியிள நங்கையர் போக
ரதிய தாலிரக் கம்மிலா தின்பமார்ந் திடலை
நுதிய பற்படிந் திதழுறு நுண்குறி நகிலிற்
பதிய வைநகக் குறியவை பகர்தரு மாலோ.

95. ஆடி கைக்கொடு காலையி லங்கனை யொருத்தி
நாடி நன்குற மலர்முகந் திருத்துவாள் நயப்பிற்
கூடு மன்பனுண் டொழிரசங் கொண்டமெல் லிதழை
நேடி நோக்குவள் பன்னுனி நிகழ்த்திய வடுவை.

96. மிக்க காமவி லாசத்து மெலிந்தவே ரொருத்தி
ஒக்க முன்னிர முழுதுங்கண் ணுறங்கிலள் சிவந்த
அக்க மோடுசோர் குழல்கவி தோண்மிசை யலையப்
புக்க மென்வெயில் மேனியைப் புலர்த்திடத் துயிலும்.

97. மடந்தை மார்சிலர் நிமிர்தட வனமுலை சுமந்து
நுடங்கு மேனியர் கனங்குழற் பரத்தினர் நுகைந்து
கிடந்த மன்றலில் பழந்தொடை கேசநின் றகற்றி
யடர்ந்த கூந்தலைப் புனைகுவ ரணிபெற மாதோ.

---

94. போகரதியால் – போகத்தில் மிக்க ஆசையால்; ரதி – இரதி, ஆசைப் பெருக்கம். ரதியது என்பதில் அது அசை. நுதிய – கூரான; பதிய வை – பதியும்படி வைத்த. இதழுறு நுண்குறியும் நகிலிற் பதிந்த நகக்குறியும் நங்கையர் இரக்கமிலாது இன்பமார்ந்திடலைப் பகர்தரும் எனக்கூட்டி முடிக்க.

95. ஆடி – கண்ணாடி; அங்கனை – பெண்; நயப்பில் – ஆசையோடு; உண்டு ஒழிரசங் கொண்ட – சுவைத்து ஒழிந்த ரசத்தையுடைய, வரண்ட என்றபடி; ரசம் – இதழமுது; நேடி – ஆராய்ந்து; வடு – அடையாளம்.

96. முன்னிர – முந்தின இரவு; இர – இரவு; அக்கம் – கண்; புக்க – புகுந்த, சூரியனுதித்ததால் வந்த; புலர்த்திட – சுட.

97. வன முலை – அழகிய முலை; வனம் – அழகு; நுகைந்து – தளர்ந்து, அவிழ்ந்து, குலைந்து; மன்றல் இல் – வாசனை யில்லாத; தொடை – மாலை; புனைதல் – திருத்துதல்.

98. கொண்கன் மேவுதன் மேனியைக் குறித்தக மகிழ்ந்து
பண்கொள் செவ்விதழ்ப் பைந்தொடி யொருத்திகூர் நகத்தாற்
புண்கொ ளங்கத்தள் புரள்தரு சுரித்தமுன் னளகம்
உண்கண் மூடிட வட்டுடை யுயர்முலைக் கணிவாள்.

99. போக நீடிய புணர்ப்பினு ளேர்ந்துடல் புலர
ஆக நீடிய வெழில்குலை யணங்கனர் சில்லோர்
மாக நீடிய நகில்கவான் வருத்திய வலிதான்
போக நீடிய வாசநெய் பூசிமண் ணுவரால்.

வேறு

100. நயப்புறுபல் நலமருவி நங்கையர்த
மனக்கினிமை நல்கி மேவும்
வயற்புறமெல் லாம்விளைந்து விளைசாலி
மலிதரவே வாய்ந்து நாளும்
வியப்புறநல் லெழில்பரப்பி மிகுமார்வத்
தன்றிலினம் விளங்க வெங்கும்
பயப்புறுமுன் பனிக்காலம் பைந்தொடிநிற்
கெந்நலமும் பயக்க மாதோ.

நாலாம் சருக்கம்
முன்பனிப் பருவ வருணனை முற்றிற்று.

---

98. கொண்கன் – கணவன்; மேவு – மேவின, தழுவின; பண்கொள் – சிறப்புப் பொருந்திய, செப்பமான; சுரித்த முன் அளகம் – சுருண்ட முன் (நெற்றி) மயிர்; உண்கண் – மை யுண்ட கண்; வட்டுடை – உள்ளுடை, கச்சு (bodice).

99. புணர்ப்பு – செயல், நிலைமை; ஆகம் – உடல், மேனி; மாகம் – மேலிடம், மேல்; மாக நீடிய – மேல்நோக்கிய, சாயாத; நகில் கவான் – நகிலையும் கவானையும்; கவான் – தொடை; மண்ணுவர் – நீராடுவர், முழுகுவர்.

100. சருக்க முடிவிற் காதலிக்கு வாழ்த்துக் கூறுவது இச்செய்யுள். நயப்பு – விருப்பம், ஆசை; பயப்பு – பயன்; பயப்புறு பயன்பொருந்திய; பயப்பு – நிறம் மங்குதல்; பயப்புறு – பனியினால் பசுமை நிறம் மங்கி வெளுப்படைந்த எனக்கொள்ளினு மமையும். பைந்தொடி மகடூஉ முன்னிலை. பயத்தல் – வழங்குதல்.

# ஐந்தாம் சருக்கம்

## பின்பனிப் பருவ வருணனை

101. அங்கங்கே யன்றி லார்ப்ப
வணிகெழு பழன மெங்குஞ்
சங்கஞ்சேர் முதிர்செஞ் சாலி
தண்கரும் போடி லங்கத்
துங்கஞ்சேர் காத லோங்கித்
தோகையர் களிப்பி னீடச்
சங்கங்கேய் கரத்தாய் கேட்டி
சார்ந்தபின் பனியாங் காலம்.

102. சார்தரு சாள ரங்கள்
தாழுறு மனையி னுள்ளுஞ்
சேர்தரு செந்தீ யோடு
செங்கதி ரொளியும் பார
மார்தரு படாமும் யௌவ
னந்திக ழணங்க ஞரும்
எர்தரு மைந்தர்க் கின்னா
ளேற்றவாந் தகைமை யேயும்.

103. சந்திர கிரண சீத
சந்தன மாடத் தும்பர்
இந்திர நிலாப் பரப்பு
மெழிற்றல மிமம்ப ரித்து

---

101. பழனம் — வயல்; சங்கம் சேர் — கூட்டமாகிய; துங்கம் — உயர்ச்சி; சங்கு எய் கரத்தாய் — சங்கு வளையல் பொருந்திய கையை யுடையவளே; மகடூஉ முன்னிலை. அங்கு அசை. பின் பனிக்கால வருணனையைக் கேட்பாயாக என்க. காலம் ஆகுபெயர்.

102. தாழுறு — தாழிடப்பட்ட, மூடப்பட்ட என்றபடி. உள்ளும் — உள்ளிடமும்; படாம் — ஆடை.

103. சந்திர கிரணம் படுதலாற் குளிர்ந்த சந்னமும் என்க. மாடத்து உம்பராகிய எழில்தலம் எனக் கூட்டுக. இந்திர இந்து

வந்திர மியமில் லாது
வழங்குகா லிவையிக் காலே
யிந்திர னிகரு மைந்தர்க்
கின்பநேர் விலவா மன்னே.

104. அடர்தரு பனிவீழ்ந் துற்ற
சீதமொ டாலோன் காந்தி
படர்தலி னின்னுஞ் சேரப்
படர்செயும் பனிய தாகிச்
சுடர்தலின் றுகு தாரா
கணமென்மா சுறுக லன்கள்
தொடர்தலிற் கங்குல் மாந்தர்
துய்ப்பதற் கேற்பி லாவால்.

105. பரிமள கந்தம் பூந்தார்
பாகடை பரித்த கையர்
விரிமலர் வதனம் பூவின்
மிகுமது வாசம் வீசக்
கருமகி லார்ந்த தூமங்
கமழ்தரு பள்ளி தன்னை
யரிமதர் நோக்க மாத
ரணுகின ரார்வ மிக்கார்.

---

இர எனப் பிரிக்க. இர – இரவில்; சந்திரன் இரவில் நிலாவைப் பரப்புகின்ற தலம் என்க. இமம் பரித்து – பனியைத் தாங்கிக் கொண்டு; இரமியம் இல்லாது – மனத்துக்கு இன்பந்தராது; வழங்கு கால் – வீசுகின்ற காற்று; நேர்விலவாம் – தராதனவாம், செய்யாதனவாம்.

104. ஆலோன் – சந்திரன்; படர் செயும் – துன்பஞ் செய்யும்; பனியது – குளிர்ந்தது; சுடர்தல் இன்றுகு – பனியினால் ஒளி மங்கிப் பிரகாசியாத; மாசுறு கலன்கள் – அழகற்ற ஆபரணங்கள்; தொடர்தலின் – சேர்ந்திருத்தலினால்; துய்த்தல் – அனுபவித்தல்.

105. பாகு – பாக்கு; அடை – வெற்றிலை; அரி மதர் நோக்கம் – அரியும் மதரும் பொருந்திய நோக்கம்; அரி – வரி; நோக்கம் – கண்.

106. பண்ணிய பிழையர் பல்காற்
பரிபவப் பட்டோ ரச்சம்
நண்ணிய தாக நெஞ்ச
மழிதர நலியு மைந்தர்
கண்ணிய காமங் கன்றி
நடுங்குதல் கண்டு மாதர்
எண்ணிய பிழைகள் யாவு
மினைவற மறந்தார் மன்னே.

107. கட்டிள மாதர் சில்லோர்
கடுநசைக் காந்த ரோடும்
மட்டில தாங்க ளிப்பின்
மன்னியே கங்குல் முற்றும்
ஒட்டிய விரவு நீங்கி
யுதயமார் போது நெஞ்சி
லட்டிய மெலிவா னெந்து
மென்மெல வசைகு வாரால்.

108. காமரு கச்சு வீக்கிக்
கனதனந் தனக்கு மார்பிற்
பூமரு செம்பட் டாடை
பொருந்துற வணிந்து கூந்தல்
தேமரு வாச மென்பூச்
செறித்திள மடவார் கோலந்
தாமரு வுற்றார் சார்ந்த
பருவத்தை யணிசெய் தென்ன.

---

106. பரிபவம் – தாழ்ச்சி, அவமதிப்பு; பல முறையும் ஊடல் காரணமாக விலக்கப்பட்டவ ரென்பதாம். கண்ணிய – கருதிய, பொருந்திய; கன்றி – விஞ்சி, முதிர்ந்து; இனைவு – துன்பம்.

101. கடு நசை – மிகுந்த ஆசை; மட்டு – அளவு, எல்லை; கங்குல் முற்றும் மட்டிலதாங் களிப்பில் மன்னி யென்க. அட்டிய – பொருந்திய; அசைகுவார் – உலாவுவார்.

108. மடவார் தனத்துக்குக் கச்சு வீக்கி, மார்பிற் செம்பட் டாடை யணிந்து, கூந்தலிற் பூச்செறித்துக் கோலம் மருவுற்றார் என்க; தம்மை யலங்கரித்தார் என்பது கருத்து. கோலந்தாம் என்பதில் தாம் அசை. தற்குறிப்பேற்றம்.

வேறு

109. குங்குமமீ தணிந்துசெய்ய கோலமுற் றேயினி தாகிப்
பொங்குமிள மைகனலப் பொலிவுறுவெம் முலைமடவார்
தங்குலவு தனமுரத்துச் சார்த்துதலி னடர்குளிரைப்
பங்கமுறச் செயுமைந்தர் பரிபவமற் றுறங்குவரால்.

110. மணங்குலவு முயிர்ப்பனில மருவுமல ரிதழசைப்பக்
குணந்திகழ்ந்து மதனவின்பங் கூட்டுகளி தருமதுவை
யிணங்கியத மன்பருட னிருந்துபனி மலியிரவி
லணங்கனையா ரொருசிலவ ரருந்துவரா லகமகிழ்ந்தே.

111. தேறல்தர வருசெம்மை தீர்வுறுமின் னொளொருத்தி
தேறல்புரி தவனணைப்பால் திண்ணென்ற தனத்தளவற்
சேறல்பொருந் தியதன்மெய்த் திறநோக்கி நகைபூத்து
மாறலிலா தவன்சார மனைபுகுவாள் பள்ளியொரீஇ.

112. பரவுகடி தடஞ்சிறுமை பரித்தவிடை பெருகுமெழில்
விரவுகடி யரணுக மேவுமிள மாதொருத்தி

---

109. இளமை கனல — இளமைக்குரிய கொம்மை வெம்மைக் குணம் மிக்குவிளங்க; பரிபவம் — எளிமை, துன்பம்.

110. அநிலம் — காற்று; உயிர்ப்பு நிலம் — மூச்சுக் காற்று, மதுவில் இடப்பட்ட மலரின் இதழை மாதரது மூச்சுக் காற்று அசைக்க என்க. மதன இன்பங்கூட்டு மது, களிதரும் மது, எனத் தனித்தனி கூட்டிப் பொருள் கொள்க.

111. தேறல் — மது, தெளிந்த கள்; செம்மை — சிவப்பு நிறம்; தேறல் புரி — தேறுதலைச் செய்கின்ற, நம்பிக்கைக்குரிய; தவன் — கணவன்; திண்ணென்ற — கடினமாகிய; அவற் சேறல் — அவனை யணைதல்; மாறலில் ஆதவன் — மாறுபடுதல் இல்லாத சூரியன்; ஒரீஇ — ஒருவி, நீங்கி. கருத்தொத்த காதற் கணவனுடன் இன்பந் துய்த்தா ளொரு நங்கை இன்ப சிகரத்தை யடைந்தவள்போல மனத்துக்கொண்ட பூரிப்பைச் சித்திரித்துக்காட்டுவது இச் செய்யுள்.

112. பரவு — பரந்த, பருத்த; பெருகும் எழில் — ஒருகாலுக் கொருகால் எற்றமடைந்து வளரும் அழகு; விரவு கடி அரண் —

நிரவுகடி யகில்கமழ்ந்து நீங்குமலர்க் குழல்தாங்கி
யிரவுகடி யினனெழும்ப வெழும்புமல ரணைதுறந்தே.

113. நீர்துலங்கிப் பொலன்கமல நிகர்காந்தி தருமுகத்தோ
டேர்துலங்கு காதளவு மேறுவிழிக் கடைசிவப்பக்
கார்துலங்கு குழலவிழ்ந்து கவிதோளிற் படியமின்னு
ரீர்துலங்கு புலரிமனை யிடைதுலங்கு திருவொத்தார்.

114. தடங்கொண்ட இடுப்பயர்வு தரவிடையு மிகநுடங்க
இடங்கொண்டு பரந்தமுலை யேந்தியிளைத் தோர்சிலவர்
மடங்கொண்ட மாதரிள நடைகொண்டு பகற்கேற்ற
படங்கொண்டு நிசிமதனப் பாயலுடை யகற்றுவரால்.

115. நகந்தந்த குறிதாங்கு நகிற்குவடு தனைப்பார்த்துஞ்
சுகந்தந்த பற்குறிகள் துலங்கிதழைத் தைவந்தும்
அகம்வந்த மதனவின்பத் தறிகுறியா மவைமகிழ்ந்து
முகமந்த முறுத்துவர்மின் னரிரவி முளைகாலை.

---

காவல்பொருந்திய கோட்டை. பருத்த அரையும் சிறுத்த இடையும் வளரும் அழகும் என்னுமிவை தமக்குச் சேமமாகிய உறைவிடமாகப் பொருந்தியிருக்கும் இளமாது என்பது கருத்து. நிரவு கடி — வாசனை நிரம்பிய; இரவு கடி — இரவைக் கோபித்து நீக்குகின்ற; இனன் — சூரியன்.

113. நீர் துலங்கி — நீரால் துலக்கமுற்று; நீரால் துலங்கிக் காந்திதரும் முகம் எனக் கூட்டுக. ஈர் துலங்கு காலை — குளிர்ச்சி பொருந்திய விடியற் காலத்தில்; காலையில் மனைகள் தோறும் இளம் பெண்கள் இலக்குமிபோலத் தோற்றம் அளித்தனர் என்பது கருத்து. இங்குக் கூறிய வருணனை இலக்குமி பாற்கடலினின்றும் வெளித்தோன்றிய கோலத்தை வருணித்ததாகலின் உவமை பொருத்தமுடைத்தாதல் கண்டின்புறத்தக்கது.

114. இளைத்தோர் சிலவர் மாதர் எனக் கூட்டுக. பகற்கேற்ற படம் — பகலில் அணிதற்கேற்ற ஆடை; நிசி — இரவில் (அணிந்திருந்த); பாயலுடை — சயன உடை.

115. தைவரல் — தடவுதல்; அகம் வந்த — மனத்திலடைந்த; மதனவின்பம் — காம இன்பம்; முகம் — முகத்தை; அந்தம் உறுத்துவர் — அழகுபொருந்தச் செய்வர்; இரவி முளை காலை — சூரியன் உதிக்கும் விடியற் காலத்தில்.

வேறு

116. பரம்புசுவை தருமுண்டி பலவுநிறை
கட்டியினுற் படைத்து மல்கக்
கரும்புசுவை தருசாலி கவின்விளங்கி
யெங்குநிறை காட்சித் தாக
விரும்புசுர தக்கலவி மிகவூட்டிக்
காதலரை மேவா தோர்க்கு
வரம்பில்துய ராக்குபனிக் காலமிது
மாண்புனக்கு வழங்க மாதோ.

## ஐந்தாம் சருக்கம்

பின்பனிப் பருவ வருணனை முற்றிற்று.

---

116. உண்டி பலவும் – பலவகையான உணவுகளும்; கட்டி – சர்க்கரை; படைத்து – உண்டாக்கப்பட்டு; சுவைதரு என்பதைக் கரும்புக்குங் கூட்டுக. சுரதக்கலவி – காமவின்பம்; மேவா தோர்க்கு – பிரிந்தவர்க்கு; வரம்பில் – அளவில்லாத; மாண்பு – சிறப்பு. இது காதலிக்கு வாழ்த்துக் கூறியது.

"மேவாதோர்க்கு வரம்பில் துயராக்கு பனிக்காலமிது" எனப் பாலை கூறினர்; அதற்கு வேனிலேயன்றி பின்பனிக் காலமும் உரித்தாகலின் என்க. இங்கு,

"பின்பனி தானு முரித்தென மொழிப"

என்னுந் தொல்காப்பியச் சூத்திரமும் அதனுரையில் வரும் 'தனித் தோர்க்குப் பின்பனி ஆற்றலரிது, இஃதெவர்க்கும் ஏதமாம்' என்னும் பகுதியும் நோக்கற்பாலனவாம்.

# ஆறும் சருக்கம்

## இளவேனிற் பருவ வருணனை

117. நிரந்துவிரி சூதநனை நீள்பகழி யாகப்
பரந்துவிரி வண்டுவில் பரித்தகயி றாகச்
சுரந்துவிரி காதலினை யோர்மனந் துளைக்கத்
துரந்துவிரி மீளியிள வேனில்வருந் தோகாய்.

118. பாதப மலர்ந்தனநீர் பங்கயம் விரிக்கும்
ஆதர மலிந்தனர்பின் னூர்வளி மணக்கும்
ஆதப நிறைந்தபகல் மாலையினி தாகும்
யாதுமித மாகுமிள வேனிலுறு மெல்லை.

119. மின்னுமணிக் காஞ்சியும் விளங்குதட நீரும்
மின்னனைய மாதரும்வில் வீசிள நிலாவுந்
துன்னுமலர் மல்குதுணர் தூங்குசினை மாவும்
மன்னுமெழில் கொள்ளவிள வேனிலே வழங்கும்.

120. சங்கையர்தம் பாரமலி வான்கடி தடந்தான்
சங்கையில் குசும்பவுடை தாங்கியணி தாங்கும்
குங்கும நிறப்பொருவு கோதறுமென் பட்டுப்
பொங்குயர் முலைக்குவடு போர்த்தழகு செய்யும்.

---

117. நிரந்து - நிறைந்து; சூதம் - மாமரம்; நனை - பூங்கொத்து; பகழி - அம்பு; கயிறு - நாண்; துரந்து - தொடர்ந்து; இளவேனிலாகிய மீளியென மாற்றிக்கொள்க. மீளி - வீரன்; தோகாய் - பெண்ணே; மகடூஉ முன்னிலை. வசந்தகாலத்தை ஒரு போர் வீரனாக உருவகஞ்செய்கின்றார் கவி.

118. வசந்தகாலக் காட்சிகள் கூறப்படுகின்றன. பாதபம் - மரங்கள்; நீர் - நீர்நிலைகள்; வளி மணக்கும் - காற்று நறுமணம் கமழும்; ஆதபம் - வெய்யில்; எல்லை - காலம் (Season).

119. தட நீர் - தடாகத்து நீரும்; வில் - ஒளி; துணர் - பூங்கொத்து; சினை - கொம்பர்; இளவேனிலே இவற்றிற்கு எழிலை வழங்கும் என்க. காஞ்சி முதலாகச் சொல்லப்பட்ட இவை சோபையுற்று விளங்குவதற்கு வசந்தமே காரணமென்பதாம்.

120. சங்கை இல் - சந்தேகமற்ற, சிறந்த என்றபடி; குசும்ப வுடை - குசும்ப நிறமான ஆடை; கோது அறு - குற்ற மில்லாத; குவடு - மேற்புறம், உச்சி.

121. கோங்கினணி தக்கநறை கொண்டமலர் காதி
லோங்குநவ மல்லிகை யசோகுமலி பூக்கள்
பாங்கினசை காரளக பாரமதன் கண்ணுந்
தேங்கின கிடந்தன திகழ்ந்தணி விளைத்தே.

122. வெண்மைதரு சந்தினளை யாரமுலை மீதும்
வண்மைதரு கைபுயத் தகல்வளைகே யூரம்
உண்மைதரு காதல்செ யுவதியர் மருங்கில்
ஒண்மைதரு காஞ்சியு முடன்கிடந் திலங்கும்.

123. கன்னமிசை தொய்யிலெழு திக்கவின் விளங்கச்
சொன்னகம லத்தெழில் துலங்குமுக மீது
மன்னுவியர் செய்துளி மலர்ந்தொளிர்வ வேறு
மின்னுமணி யோடுசெறி முத்துமிளிர்ந் தென்ன.

124. தங்குமத னத்தளர்வு தாங்குதம கங்கம்
பங்கமடை யாதபரி சாற்றியினி துற்ற
திங்கண்முக மாதரிது போதருகு சேருந்
தங்கண்மண வாளரிலா தரம்மிகவும் வைத்தார்.

---

121. பாங்கின் அசை - பக்கத்துக்குப் பக்கம் அசைகின்ற; பாங்கு - பக்கம்.

122. சந்தின் அளை - சந்தனத்திற் றோய்ந்த. கையிலும் புயத்திலும் முறையே வளையலும் கேயூரமும் என நிரனிறையாகப் பொருள் கொள்க. கேயூரம் - தோளணி; மருங்கு - இடை; ஒண்மை - அழகு, ஒளி.

123. சொன்ன கமலம் - பொற்றாமரை. சந்தனம், குங்குமம், கஸ்தூரி முதலியவற்றால் கோலந் தீட்டிய பொன்னிறமான முகத்தில் வியர்வைத் துளிகள் விளங்குவது முத்துக்கள் ஏனைய இரத்தினங்களிடையே கலந்து தோன்றுவதுபோலும் என உவமை வந்தவாறு காண்க.

124. மதனத் தளர்வு - மதனத்தால் வந்த தளர்வு; மதனம் - சிற்றின்ப போகம். தமது அங்கமானது அழகு பங்கமுறாதபடி ஆற்றியிருந்த மாதர் என்க. ஆதரம் - அன்பு, காதல்.

125. ஏர்வரு மடந்தையிள மேனிமத னேவாற்
சோர்வர மெலிந்தசைவு தோன்றுநிற மாறிப்
பீர்வரும் பினும்பினுங்கொட் டாவியே பெருக்குஞ்
சீர்வரு கலக்கமுற லாற்கவின் சிறக்கும்.

126. மதுப்பருக லான்மதர்கொள் வாள்விழி சுலாவும்
கதுப்புவிளர்க் குங்கனத னங்கடின மேவும்
விதப்புறு மருங்குன்மெலி யுங்கடி பெருக்கும்
விதுப்புறிள மெல்லியர்தங் காமம்வெகு வாறும்.

127. பாவகமி லாதுதுயி லாற்பதியு மங்கம்
நாவகமி யைந்தசொல் நயந்துகளி கூரும்
கோவகமுன் னோக்குபுரு வத்திற்கடை கூடும்
சேவகமி வைசெயும்வேள் சேயிழையார் மாட்டு.

---

125. காதலுணர்ச்சியின் வேகத்தால் இளம் பெண்களின் மேனியில் தோன்றும் சில மெய்ப்பாடுகளைக் கூறுவது இச் செய்யுள். மதன் ஏவலால் - மன்மத பாணத்தால்; ஏ - பாணம், அம்பு; பீர் - வெண்மை, விளர்ப்பு; பெருக்கும் - அதிகமாக்கும்; கலக்கம் - பரபரப்பு; மடந்தையது மேனி, காமவிகாரத்தால், (1) மெலிந்து தோன்றும்; (2) பீர் வரும், (3) கொட்டாவியைப் பெருக்கும், (4) கலக்கத்தால் இன்னும் கவினுற்று விளங்கும் என்பது கருத்து. கலக்கம் (**Excitement**) என்பது உணர்ச்சிப் பெருக்கால் விபரீதமாக நடத்தல்; உதாரணமாக, காலிலணிவதைக் கழுத்தில் அணிதல் நெற்றிக் கிடுவதைக் கண்ணுக்கிடுதல் முதலியன.

126. மதர்கொள் - களிப்புற்ற; வாள்விழி - கூரியகண்; சுலாவும் - சுழலும், சுழன்ற பார்வையை யுடையதாகும்; கதுப்பு - கன்னம்; விதப்பு - வியந்து கூறல்; விதப்புறு - வியந்துசொல்லத் தக்க; மருங்குல் - இடை; கடி - அரை; பெருக்கும் - விசாலிக்கும், பொலிவடையும்; விதுப்பு உறு - ஆசை கொண்ட; காமம் - காமத்தின் நிலைமை; வெகு வாறும் - பலவிதமாகும்; வாறு - விதம்.

127. பாவகம் - குறிப்பு; பாவகமிலாது - காதற் குறிப்பை வெளிப்படுத்தாது; துயிலால் - சோம்பினால், அங்கம் பதியும் என்க. பதிதல் - பொலிவழிதல்; நயந்து - ஆசையை (காதலை) யுணர்த்தி; களிகூரும் - களிப்பைக் காட்டும்; கோ - கண்; கோ அக - கண்ணிடத்துள்ள; முன்னோக்கு - நேர்பார்வை; புருவத்தின் - புருவத்து அசைவினால், நெளிவினால்; கடை கூடும் - கண்ணின் கடையைச் சேரும்; கண்ணினது நேர்பார்வை புருவங்

128. காதலின்வி லாசமுறு காரிகையார் காம
மீதலின்ம யர்ப்பினர்தம் வெம்மிள முலைக்குச்
சீதலகந் தம்மதஞ்சீர் ஞாழன்மர மஞ்சள்
ஓதல்வரு குங்குமமு மார்கலவை யுய்ப்பார்.

129. முன்னணி கனத்தவுடை முற்றுற விலக்கி
மன்னணி விளக்குமரக் கின்வணம தாகித்
துன்னகில் மணக்குநவ மென்துகி லுடுப்பார்
மன்னணிகொண் மாதர்விர கத்தினயர் மெய்யார்.

வேறு

130. தேமா மலர்த்தே னருந்திக்களி கொண்டு சிந்தை
காமா துரமார் குயில்பேடு கலந்து கொஞ்சுந்
தூமா மலரிற் சுழல்வந்திசை கோலும் வண்டர்
தாமா தரஞ்செய் தளிகாட்டும் பெடை தனக்கே.

131 செந்தீ விரிந்த தெனச்சேந்த தளிர்க்க னஞ்சு
மந்தே வளையுஞ் சினைபூத்தணி மாண்ட தேமா

---

களின் தெளிவால் கடைக்கண்பார்வையாகும் என்பதாம். சேவகம் - ஊழியம், வீரம். சேயிழையார்மாட்டு வேள்செயும் சேவகம் இவை (யாம்) என முடிக்க.

128. காதலின் விலாசம் உறு - காதலால் மனங்களிப் படைந்த; காமம் - ஆசை; மீதலின் - மிகுதலால்; மயர்ப் பினர் - மயங்கினவராகி; சந்தம் - சந்தனம்; மதம் - மான்மதம்- கஸ்தூரி; ஞாழல் - ஒருவகை வாசனைத்திரவியம்; குங்குமம் - குங்குமப்பூ; ஆர் - ஆர்ந்த, நிறைந்த. காரிகையார் முலைக்குக் கந்தம் முதலியவை கலந்த கலவையை யப்புவர் என்பதாம்.

129. அரக்கின் வணம் - சிவந்த நிறம்; நவ - புதிய; மின்னு அணிகொள் - பிரகாசிக்கின்ற ஆபரண மணிந்த; விரகம் - காமம்.

130. சிந்தை காம ஆதுரம் ஆர் - மனம் காமத்தினுற் பரபரப் படைந்த; ஆதுரம் - பரபரப்பு, கிளர்ச்சி; தூ - புதிய; மாமலர் - தாமரை மலர்; இசைகோலும் - இசைபாடும்; வண்டர் - வண்டு, போலி; தாம் - அசை; அளிகாட்டும் - (அன்பை வெளிப்படுத்தும்) இனிய உபகாரச் செயலைச் செய்யும்.

131. செந்தீ விரிந்தது என - சிவந்த நெருப்புத் தோன்றியது போல; சேந்த தளிர் - சிவந்த தளிர்கள்; சினை பூத்து அணி மாண்ட - கொம்பர்கள் பூக்களையலர்த்தி யழகு மாட்சிமைப்பட்ட;

மந்தா நிலத்தா லசைதந்து வயங்கிக் காணு
மிந்தீ வரநோக் கியர்நெஞ்சி லிழைக்கு மின்னல்.

132. துப்பார்ந் ததென்னத் தொடுமூல முதற் சிவந்து
கப்பார்ந் திலகு தளிர்மென்மலர் காட்ட சோகம்
செப்பார்ந் துயர்ந்து செறிவெம்முலை சேர்ந்து யாணர்
ஒப்பார்ந் தமின்னு ருளத்தேநனி கூட்டுஞ் சோகம்.

133. களியார் சுரும்பர் விழுந்தூது கவின்கொள் பூவும்
தளியா ரிளங்கா லசைமென் றளிருஞ் சுமந்தே
ஒளியா ரதிற்கு மதிமுத்த முவந்து நோக்கும்
அளியார் மனக்கா தலர்க்காசை விளைக்கு மாலோ.

---

இந்தீவரம் - கருநெய்தல், கருங்குவளை; இழைக்கும் - உண்டாக்கும்; இன்னல் - துன்பம்; காமவிகாரத்தை யுண்டாக்கும் என்றபடி. தேமா அசைதந்து வயங்கி நெஞ்சில் இன்னல் இழைக்கும் எனக் கூட்டி முடிக்க. தென்றற் காற்று வீசுங்காலத்து மாமரம் சிவந்த தளிரைக் காலும் என்பதும் மாந்தளிருக்குத் தீ உவமையாகும் என்பதும் இங்கு அறியத்தக்கன. இதனோடு,

"தென்னந் தமிழி னுடன்பிறந்த
சிறுகா லரும்பத் தீயரும்பும்
தேமா நிழற்கண் ........" (மீ. பி. தமிழ் 24)

"அவரோ வாரார் தான்வந் தன்றே
பொரிகான் மாஞ்சினை புதைய
எரிகா லிளந்தளி ரீனும் பொழுதே." (ஐங். 349)

என்பவற்றையும் ஒப்புநோக்குக.

132. துப்பு ஆர்ந்தது என்ன - பவளத்தாற் செய்ததுபோல; தொடுமூலம் - மரத்தில் தொடுகின்ற காம்பு; கப்பு - கொம்பர்; மலரைக்காட்டு அசோகம் என்க. செப்பு ஆர்ந்து - செப்பை நிகர்த்து; யாணர் - இளமையும் புதுமையுமான; ஒப்பார்ந்த - அழகையுடைய; ஒப்பு - அழகு; அசோகம் மின்னுருளத்துச் சோகம் கூட்டும் எனக் கூட்டுக. சோகத்தைப் போக்குவது என்பதால் அசோகம் எனப்பெயர் பெற்றது (இப்போது) சோகத்தை உண்டாக்குவது ஆயிற்றென முரண்தொனி தோன்றக்கூறிய நயம் படித்தின்புறத்தக்கது.

133. தளி ஆர் இளங்கால் - குளிர்ச்சி பொருந்திய மெல்லிய தென்றற் காற்று; அதி முத்தம் - குருக்கத்திமரம்; அளி - அன்பு. உருக்கம்.

வேறு

134. மனத்தி னுக்குகந் தாள்வத னத்தெழில் காட்டித்,
தினத்த லர்ந்தசெந் தேமலர் செறிதரு குரவின்
கனத்த பூந்துணர் காண்மனத் தாரெவர் காந்தாய்
சினத்த மாரனம் பாலகஞ் சிதைவுறு தவரே.

135. எரியுஞ் செந்தழ னிறம்புரை யினமல ரீன்று
சரியுங் காலினுற் சலிப்பலா சந்தரு வெங்கும்.
விரியும் மேதினி விளங்கிள வேனிலா மிந்நாட்
புரியும் செவ்வுடை புனைபுது மணப்பெணிற் பொலியும்.

136. கிளியி னூசியிற் கேழ்கிளர் பலாசமென் மலரால்
விளிய வேநொறுக் குற்றில தோவியன் கோங்கின்
தளிய பூவினுல் வெந்தில தோதலை யாய
அளிசெ யாடவ ரிதயந்தா னழிப்பதென் குயிலும்.

---

134. தினத்து அலர்ந்த - அன்றலர்ந்த; குரவு - குராமரம்; காண் - பார்க்கின்ற; மனத்தார் - உணர்ச்சி பொருந்தியவர்; காந்தாய் - பிரியையே!; மகடூஉ முன்னிலை. சினத்த - சினம் பொருந்திய; மாரன் - மன்மதன்; அகம் - மனம்; சிதைவுறல் - நிலைகலங்கி விகாரமுறுதல்.

135. நிறம் புரை - நிறத்தை யொத்த; இன மலர் - கூட்டமாகிய மலர்; சரியுங் கால். வீசுகின்ற காற்று; சலி - அசைகின்ற; விரியும் - பரம்பியிருக்கின்ற, நிறைந்திருக்கும்; புரியும் - விரும்புகின்ற. சிவந்த பூக்களைத் தாங்கிப் பலாசமரம் நெருங்கி வளர்ந்திருக்கும் பூமியைச் செவ்வுடையணிந்திருக்கும் புது மணப்பெண்ணுக உவமிக்கின்றுர் கவி. உவமையணி.

136. கிளியினூசியின் - கிளியின் மூக்குப்போல; கேழ்கிளர் - செந்நிறம் பொருந்திய; விளிய - இறக்கத்தக்கதாக; தலையாய அளி - மேலாகிய அன்பு, உண்மைக் காதல். உண்மைக் காதலருள்ளம் எலவே பலாசமலரால் நொறுங்குற்றும், கோங்கமலரால் வெந்தும் இருப்பதைக் குயிலும் தன் இனிய ஓசையால் இன்னும் அழிக்க முயல்வது எற்றிற்கு என்பது கருத்து. விலக்கணி.

137. விரும்பு மெல்லிசை மேவிய குயிலொலி கேட்டும்
சுரும்பு மால்கொடு முரலுமின் றொனியது கேட்டும்
பெரும்பு கழ்க்குடிப் பிறந்தவ ரென்னினு நாணம்
அரும்பு சிந்தையிற் கொள்வர்மா லணங்கனார் கணத்தில்.

138. பூத்தி கழ்ந்தணி பொங்குதே மாச்சினை யசைத்துப்
பாத்தி யெத்திசை யுங்குயிற் பாடலை யவனி
சாத்தி வீழ்பனி தணத்தலி னிதமதா யெவரு
மேத்தி யின்புற வசந்தமா ருதமினி தியங்கும்.

வேறு

139. ஆடியல் நோக்க மாத ரரும்புமென் னகைய தென்ன
ஏடியல் முல்லை பூத்த வெழிலுப வனத்தைக் காணும்
வீடிய பற்றி னோர்தம் மனமுமால் மேவு மென்னிற்
கூடிய மைந்தர் கொள்கை கூறவும் வேண்டு மோதான்.

---

137. நற்குடிப் பிறந்து நாணம் முதலிய குணங்கள் வாய்ந்த மகளிரும் குயில் கூவுதலையும் வண்டு பாடுதலையுங் கேட்ட அளவில் மனக்கிளர்ச்சியுற்றுக் காதல்வயப்படுவர் என்பது கருத்து. வசந்த காலத்தின் இயல்பு கூறியவாறு.

138. குயிற் பாடலை யெத்திசையும் பாத்தி எனக் கூட்டிப் பொருள் கொள்க. பாத்தி - பரப்பி, பரவச்செய்து; அவனி சாத்தி - பூமியை மூடி (மறைத்து); தணத்தல் - நீங்குதல். முந்தின பருவகாலத்தில் பூமியை மூடிப்பெய்த பனி இப்போது நீங்கி விட்டமையால் காற்று உடலுக்கு இதமாயிருக்கிறது (103-ம் செய். பார்க்க); அதனால் இப்போது அதனை எல்லாரும் வரவேற்று மகிழ்கிறார்கள். வசந்த மாருதம் - தென்றற் காற்று; வசந்தமாருதம் அசைத்து, பாத்தி, இதமாய் இனிது இயங்கு மென்க. தன்மை நவிற்சி.

139. ஆடு இயல் நோக்கம் - அசையுந் தன்மை பொருந்திய கண்கள்; அரும்பு - வெளிப்படும்; மென்னகை - புன்முறல்; உபவனம் - பூஞ்சோலை; வீடிய பற்றினோர் - பற்று நீங்கினவர், துறவியர்; கூடிய (பற்றினோர்) மைந்தர் - பொருந்திய பற்றுடையவராகிய மைந்தர் (காளையர்); கொள்கை - கோட்பாடு, கருத்து.

140. துலங்குபொற் காஞ்சித் தாமந் துயல்வரு மிடையர் ஆரம்
இலங்குபொற் புறுத னத்த ரிகலிமா ரன்வ ருத்தக்
கலங்குமங் கத்து மின்னார் கானமார் குயில்வண் டென்ன
நலங்குலவுறுமின் சொல்லால் நயப்புறுத் துவர்நீ ரர்க்கே.

வேறு

141. பலவினமாம் விழைதகுமென் மலர் பரித்துப்
பாங்கரெலாம் பாதபங்கள் பரக்க வெங்கும்
நிலவினமாங் குயிலினங்கள் நீடு கானம்
நிகழ்த்தொலியாற் சாரலெலா நிறைய நீண்டு
குலவினமா தருமேக வணக் குறிஞ்சி
கூடியகன் மலையகத்தைக் கோலஞ் செய்யக்
கலவினமாண் புறுகாட்சி காட்டுங் குன்றங்
காண்பவர்க்கெல் லாமகிழ்ச்சி காட்டு மாலோ.

வேறு

142. கண்ணை மூடுவன் கதறுவன் கலங்குவன் முகரா
நண்ணு நாசியைப் பொத்துவன் நவிலுவ னரத்துப்
பெண்ணை நீங்கிய பெருந்துய ருழுமனப் பதிகன்
விண்ணை மூடுபூ மிடைந்ததே மாவைமுன் கண்டு.

வேறு

143. மயலார் சுரும்ப ரிசையாலும்
வனக்கோ கிலக்கூக் குரலாலும்
வியலார் சினைமாம் பூவாலும்
விளங்கு கோங்க மலராலும்

---

140. காஞ்சித் தாமம் - மேகலை நூல்; துயல்வரு - அசைந்து தூங்குகின்ற; ஆரம் - மாலை; இகலி - பகைத்து; கானம் ஆர் - இனிய ஓசைபொருந்திய; நயப்புறுத்துவர் - ஆசையூட்டுவர்.

141. இது குறிஞ்சிசில வருணனை. குறிஞ்சி - குறிஞ்சிமரம்; மேகவர்ணமான பூக்களை யலர்த்துவதால் இது மேகவணக்குறிஞ்சி யெனப்பட்டது. கோலஞ் செய்ய - அழகு செய்ய; கலவின - பல வினமான; தன்மை நவிற்சி.

142. காதலியைப் பிரிந்து வழிச்சென்றோன் ஒரு காதலன் வழியில் தழைத்துப் பூத்துக் குலுங்கி நிற்கும் தேமாவைப் பார்த்து விரகதாபமுறுகின்றான். அவனது நிலைமைகளை வருணிப்பது இச் செய்யுள்.

143. மயல் - மையல், ஆசை; வனக்கோகிலம் - அழகிய குயில்; வியலார் - பரந்த, விசாலமான; செயலார்தரு - காரி

செயலார் தருகூர்ங் கணையினெனத்
தேனார் மலர்கள் சேர்மாசம்
புயலார் குழன்மங் கையருள்ளம்
புண்ணே செய்யு மதன்பொருட்டால்.

வேறு

144. சூத மல்கு மலர்த்துணர் தூர்கணை
தோமில் கிஞ்சுக மாமலர் துன்னுவில்
ஏத மில்லளி யின்குல மேற்றுநாண்
இந்து மண்டல மேய்கொற்ற வெண்குடை
சீத மென்மல யாநிலஞ் சிந்துரம்
சேருங் கோகிலம் வந்திக ளாத்திகழ்
நாத னுமநங் கன்வசந் தந்தழீஇ
நல்க நிற்கு வளங்களி யாவுமே.

ஆறம் சருக்கம்
இளவேனிற் பருவ வருணனை முற்றிற்று.

இருது சங்கார காவியம் முற்றிற்று.

---

யத்தைச் சாதிக்கவல்ல, திறமை பொருந்திய; வசந்த காலத்து மலர்நிறைந்த மாசமானது மங்கையருள்ளத்தைக் கூரிய அம்பினாற் புண்செய்தாற்போல இசையாலும் குரலாலும் மலர்களாலும் புண் செய்யும் என்பதாம். புண்செய்தலாவது மனத்தினமைதியைக் குலைத்து இன்பவெறிகொண்டு கலங்கச் செய்வதாம். வசந்தம் மன்மதனது தோழனாதலின் பக்கபலமாகநின்று இவ்வாறு செய்யு மென்பது தோன்ற 'மதன்பொருட்டுப் புண்செய்யு' மென்றாரென்க.

144. இச்செய்யுளில் மன்மதன் ஒரு பெரிய அரசனாக வருணிக்கப்படுகிறான். "மாரனை மகுடஞ் சூட்ட வந்தது வசந்த காலம்" என்றதுபோல; வசந்தத்தைத் துணையாகக்கொண்டு அரசர்களுக்குரிய வரிசைகளோடு மன்மதன் மூவுலகையும் வெல்லும் பெரும் வீரனாகத் தோன்றுகிறான். நான்முடிவில் காதலிக்குக் கூறும் வாழ்த்து இது.

கிஞ்சுகமாமலர் - பலாசம்பூ; இந்து மண்டலம் - சந்திர வட்டம்; எய் - பொருந்திய; சீதம் - குளிர்ச்சி; மலயாநிலம் - (மலய அநிலம்) மலயமலையினின்று வருங்காற்று, தென்றல்; சிந்துரம் - யானை, பட்டத்துயானை; வந்திகள் - துதிபாடகர்; அநங்கன் - உருவிலி, மன்மதன்; அநங்கன் நிற்கு நலங்கள் யாவும் நல்க எனக் கூட்டிமுடிக்க.

# செய்யுண் முதற் குறிப்பகராதி


| செய்யுள் | செய். இலக். |
|---|---|
| அ | |
| அங்கங்கே | 101 |
| அங்கமலிய | 87 |
| அஞ்சுற | 39 |
| அடர்தரு | 104 |
| ஆ | |
| ஆடல்விட் | 69 |
| ஆடிகைக்கொடு | 95 |
| ஆடியல்நோக்க | 139 |
| ஆதவன்கிரணஞ் | 13 |
| ஆரியத்தின் | பாயிரம் 2 |
| இ | |
| இழுதுறுமோம | 16 |
| எ | |
| எரியுஞ்செந்தழல் | 135 |
| ஏ | |
| ஏர்வருமடந்தை | 125 |
| க | |
| கட்டவிழ் | 24 |
| கட்டிளமாதர் | 107 |
| கடிகமழ் | 46 |
| கண்ணிறை | 65 |
| கண்ணெறிவின் | 142 |
| கதமுறுபுது | 43 |
| கதித்துவிம்மு | 89 |
| கந்தமார் | 17 |
| கயலினம் | 59 |
| கரியநொச்சி | 70 |
| கருங்குவளை | 50 |
| களியார்சுரும்பர் | 133 |

| செய்யுள் | செய். இலக். |
|---|---|
| கன்னமிசை | 123 |
| கனத்துவளை | 55 |
| கனையொலி | 38 |
| கா | |
| காசும்மணியும் | 86 |
| காசைப்பூ | 57 |
| காட்டனல் | 25 |
| காதலின்விலாச | 128 |
| காதலுற்ற | 80 |
| காமஞ்சாலு | 85 |
| காமருகச்சு | 108 |
| காமருபட்டும் | 4 |
| காமுறுமிதுன | 67 |
| காய்தருகதிர் | 18 |
| கார்வளர் | 48 |
| காரகிலார் | 49 |
| காவிநேர் | 40 |
| கானுர்நெய்தல் | 71 |
| கி | |
| கிளர்ந்துமிர் | 53 |
| கிளியினுசி | 136 |
| கு | |
| குங்குமமீ | 109 |
| குவிந்துகோல | 84 |
| கொ | |
| கொங்குலாமலர் | 78 |
| கொண்கன்மேவு | 98 |
| கொண்டலன்ன | 75 |
| கோ | |
| கோங்கினணி | 121 |

| செய்யுள் | செய். இலக். |
|---|---|
| ச | |
| சந்தமார்ந் | 6 |
| சந்திரகிரண | 103 |
| சா | |
| சாதகவினங்கள் | 31 |
| சாந்தநீருறை | 8 |
| சார்தரு | 102 |
| சி | |
| சிந்தியகமலம் | 42 |
| சூ | |
| சூதமல்கு | 144 |
| சூரியகிரணங் | 20 |
| செ | |
| செங்கதிர்க்கரம் | 79 |
| செங்கதிர்ச்செல்வன் | 1 |
| செந்தீவிரிந்த | 131 |
| த | |
| தங்குமதனத் | 124 |
| தடங்கொண்ட | 114 |
| தடம்புகுந்து | 19 |
| தருக்குசிந்தை | 76 |
| தலைப்பெயல் | 51 |
| தா | |
| தாங்கருவேனிற் | 10 |
| தாமரைவளையம் | 60 |
| தாரகைக்கண | 63 |
| தி | |
| திங்கள்மணிப் | 12 |
| திருந்து | பாயிரம் 1 |
| து | |
| துப்பார்ந்த | 132 |
| துலங்குபொற் | 140 |

| செய்யுள் | செய். இலக். |
|---|---|
| துளிதரு | 29 |
| துன்னுசுக | 88 |
| தே | |
| தேமாமலர் | 130 |
| தேமுறவிரி | 82 |
| தேறல்தர | 111 |
| தொ | |
| தொகையுறு | 41 |
| ந | |
| நகந்தந்த | 115 |
| நயப்புறுபல் | 100 |
| நி | |
| நிரந்துவிரி | 117 |
| நிரையுறு | 45 |
| நீ | |
| நீடுசால்மலி | 26 |
| நீணிலங்காசை | 58 |
| நீர்துலங்கு | 113 |
| நீலமலரோட | 91 |
| நீலமார்குவளை | 30 |
| ப | |
| பச்சிலைகளுற | 23 |
| பஞ்சிதோய்க | 5 |
| படர்ந்தபுல் | 36 |
| பண்ணியபிழை | 106 |
| பதுமவனத் | 28 |
| பரம்புசுவை | 116 |
| பரவுகடிதடஞ் | 112 |
| பரிமளகந்தம் | 105 |
| பலவினமாம் | 141 |
| பனியின்குளிர் | 92 |

| செய்யுள் | செய். இலக். |
|---|---|
| **பா** | |
| பாதபமலர்ந்தன | 118 |
| பாவகமிலாது | 127 |
| **பு** | |
| புதியயௌவனம் | 94 |
| புதியவிலையும் | 83 |
| புதுப்பெயற் | 54 |
| புலர்தரு | 15 |
| **பூ** | |
| பூத்திகழ்ந்தணி | 138 |
| பூவினீடிய | 93 |
| **பொ** | |
| பொங்குவெங் | 11 |
| பொடியுறு | 61 |
| பொருந்திய | 21 |
| பொருந்துரு | 32 |
| **போ** | |
| போகநீடிய | 99 |
| **ம** | |
| மங்கையர்தம் | 120 |
| மஞ்சிலாது | 77 |
| மஞ்சினம் | 34 |
| மடந்தைமார் | 97 |
| ம[illegible]டியநீல | 2 |
| மணங்குலவு | 110 |
| மதுப்பருகலான் | 126 |
| மயலார்சுரும்பர் | 143 |
| மருண்டசை | 37 |
| மன்னுநீர்க்காக்கை | 64 |
| மனத்தினுக்கு | 134 |

| செய்யுள் | செய். இலக். |
|---|---|
| **மா** | |
| மாசுறுநீரால் | 35 |
| மாதர்தங்கள் | 81 |
| **மி** | |
| மிக்ககாம | 96 |
| மிகுதருதாகம் | 14 |
| மிளிரும்பூண் | 74 |
| மின்னலின்கொடி | 47 |
| மின்னார்தம் | 73 |
| மின்னுமணி | 119 |
| **மு** | |
| முதிர்தரு | 66 |
| முதிருஞ்சாலி | 90 |
| முன்னணிகனத்த | 129 |
| **வ** | |
| வகிருறுவயிடு | 33 |
| **வா** | |
| வானவில்மேகந் | 68 |
| **வி** | |
| வியர்வுதோன்றுபு | 7 |
| விரிவகுள் | 52 |
| விரும்புமெல் | 137 |
| விரைதவழ் | 3 |
| விழைதகுபல் | 56 |
| விழைநெற்குவை | 72 |
| **வீ** | |
| வீசுமந்தாநில | 62 |
| வீறுகொண் | 22 |
| **வெ** | |
| வெண்மைதரு | 122 |
| வெந்தமேனி | 27 |
| வெள்ளிதழ்க் | 44 |
| வெள்ளைமாடத் | 9 |